96

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 7.

உ
சிவமயம்
31 J
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௪ | பிரசோற்பத்தி ஆண்டு ஆடித் திங்கள்<br>1931 ஞு ஜூலை | இதழ் ௭ |
|---|---|---|

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சிவஞானபோத விளக்கம் ... ... | ... ௧௬௧ |
| முருகன் நண்மாண் ... ... | ... ௧௭௫ |
| கடவுள் நிச்சயமும் அவரை வழிபடும் விதமும் | ... ௧௭௬ |
| திருவூடல் ... ... ... | ... ௧௭௮ |
| பெரிய புராணமும் சாதியும் ... | ... ௧௮௦ |
| அறிவோடு இயைந்த உணர்வின் தோற்றம் | ... ௧௮௬ |
| திருமுறைப் பெருமை ... ... | ... ௧௮௮ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

# திருக்கொள்ளம்பூதூரில்
# நம் சமாஜக் கூட்டம்

இவ்வூர்க்கோயில் நச்சாந்துப்பட்டி உயர்திரு. பெ. ராம. ராமஞ் செட்டியார் அவர்களால் திருப்பணி செய்யப்படுகின்றது. நாளது வைகாசிமீ 22உ திருப்பணிக்காகப் பாலாலயம் செய்யப்பெற்று பகல் 10 நாழிகைக்கு ஆகம விதிப்படியும், ஆறு காலபூஜையுடனும், பல்வகைச் சிறப்புடனும் கும்பாபிடேகம் நிறைவெய்தியது. பின்னர் அடியார் பூஜை மிக விரிவாக நடைபெற்றது. மாலை 7 மணிக்குச் சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தின் சார்பாக வில்வவனநாதர் திருக்கோயிலில் பெருந்திரளாக அடியவர்கள் கூடினர். முதலில் திருமுறை ஓதப்பெற்றது. பின்னர் அந்த அவைக்கு மெய்த்திரு கொரடாச்சேரி வாலையானந்த சுவாமியவர்கள் தலைமை ஏற்றருளினர். அப்போது சுவாமியவர்கள் சைவசமயத்தின் உயர்வையும் சிவசின்னங்களின் உட்பொருள்களையும் விரித்துக்கூறினர்கள். பின் தஞ்சை சிவபுராணிகர் திரு. பா. சிவகுருநாத பிள்ளையவர்கள் "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்ற தலைப்பின்கீழ் கேட்டார் பிணிக்கும் தகையவாய் விரிவுரை நிகழ்த்தினர். 'திருநாமம் அஞ்செழுத்தும்' என்னும் தாண்டகத்தின் பொருள் கூறும் வாயிலாக சைவர்களின் கடமைகளை இனிது விளக்கினர். பின்னர் தமிழ்ப் பண்டிதர் ப. சிங்காரவேற் பிள்ளை யவர்கள் "சிவஞானிகளும் சிவாலயமும்" என்று எடுத்து மிக உருக்கமாக சிவாலயத்தின் இன்றியமையாமை சிவஞானிகளுக்கும் உண்டென்பதைக் கொள்ளம் பூதூர் தேவாரத்திலிருந்தும், வரலாற்றிலிருந்தும் விளக்கினர். மகிபாலன்பட்டி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் 'சிவபக்தி' என்று எடுத்துக்கொண்டு பக்தியின் இலக்கணத்தையும் அதைக்கையாளும் முறைமையைப்பற்றியும் இனிது விளக்கி முடித்துத் திருப்பணிச் சிறப்பையும் இதற்கு இன்றியமையாத இவ்வறிஞர் கூட்டத்தையும் இதற்குத் துணை புரிந்தவர் தன்மையையும் திருப்பணி செட்டியார் அவர்கள் செய்த பேராவூர்ப் பிள்ளையார் திருப்பணி அவர் செய்யும் இப்பெருந் திருப்பணிக்குக் காரணமாயதையும் விளக்கினர். அதன் பின்னர் தலைவர் எழுந்து சொற்பொழிவாளர் சொல்லிய பொருள்களுட் பலவற்றின் நுண்மையைக்கூறி அதன் நலங்கள் பல விளக்கிக் கோயில் கட்டுவதுடன் நில்லாது பணியாளர்கள் கோயிலுக்குக் கும்பிட வருவோரையும் அறிவெய்தச் செய்ய வேண்டுமென்று முடிவுரை கூறினர். முடிவில் திரு. சாமி. வேலாயுதம்பிள்ளை எழுந்து இக்கூட்டம் கூட்டிய முறையைச் சொல்லித் திருப்பணி செட்டியார் அவர்கள் முதலிய எல்லார்க்கும் நன்றிகூறிச் சபையை நிறைவெய்தச் செய்தனர். இரவு பத்து நாழிகைக்குமேல் பல்லியங்கறங்கவும், தமிழ் ஆரியமறைகள் ஓதப்பெறவும் இறைவன் உலாப்போந்த காட்சியும் கேள்வியும் யாவர் கண் காதுகளையும் இன்புறச் செய்தன.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

31

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

| மலர் ௪ | பிரசோற்பத்தி ஆண்டு ஆடித் திங்கள் 1931 ௵ ஜூலைமீ | இதழ் ௭ |
|---|---|---|

## சிவஞானபோத விளக்கம்

[கி. குப்புச்சாமி முதலியார்]

### சிறப்பியல்பு

### சாதன வியல்

### ஏழாஞ் சூத்திரம்

" யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராதலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
இருதிற னறிவுள திரண்டலா வான்மா "

மேற்கூறிய ஆறு சூத்திரங்களிலும் சிவாகமங்களில் கூறப்படும் பதி பசுபாசங்களின் பொருள்களின்பொது வியல்பினைப் பிரமாண முகத்தாலும், இலக்கண முகத்தாலும் ஆராய்ச்சி செய்து உணர்த்திய ஆசிரியர் மெய்கண்டார், அம்முப் பொருள்களுடைய 'சிறப்பியல்பு' என்று கூறும் உண்மையினைச் சாதன முகத்தாலும் பயன் முகத்தாலும் ஆராய்ச்சிசெய்து உணர்த்துவான் விரும்பி, முதல் மூன்று சூத்திரங்களால் அம்முப்பொருள்களை யறிந்து, அறிதலாலாகிய பயன் பெறுவதற்கு ஏதுவாக நிற்கும் சாதனம் என்பதைக் கூறத் தொடங்கினர். அம்மூன்று சூத்திரங்களுள் முதல் சூத்திரமாகிய இச் சூத்திரம் ' உணர்வுரு அசத்து ' என்றும், ' இருதிறன் அல்லது சிவசத்து ' என்றும், இதற்கு முன் சூத்திரத்துள் அளவு படுத்திக் கூறியவிடத்து அவ்விதம் அறியும் பொருள் அவ்விரண்டினுள் ஒன்றோ, அல்லது வேறோ என்னுஞ் சந்தேகத்தில் அவ்விரண்டனுள் ஒன்று ஆகல் கூடும் என்று கூறும் கொள்கையைப் பற்றி யுண்டாகும் வினாவிற்கு விடை கூறுவார் போன்று, சத்தோடு சேர்ந்த காலத்து சத்தாயும், அசத்தோடு சேர்ந்த காலத்து அசத்தாயும் உள்ள சதசத்தின் இயல்பினையுணர்த்துதற்கு இச்சூத்திரம் எழுந்ததாகும்.

அன்றியும், உலகத்து ஒரு பொருளையறிந்தவிடத்து, அறிந்ததாகிய அப்பொருளின் பயனையடைதற்கு உரிய முயற்சிகளைச் செய்வார்க்கு, அதனைச் சாதிக்கும் வலிதமக்கு உண்டென்றும், சாதித்தவதனால்வரும்பயன் இதுவென்றும், அதனை யுண்டுபண்ணக்கூடிய சாதனமாவது இதுவென்றும், அச்சாதனம் வரும் வழி இதுவென்றும் உணர்ந்தாலல்லது அம்முயற்சியின்கண் ஊக்கஞ்செல்லாதுஆதலால், இவ்விடத்துச் சொல்லப்படும் சாதனத்தைச் செய்து பயனடைதற்கு உரிய அதிகாரியாகிய ஆன்மாவினது இயல்பு இது என்று அறிவிப்பதாகிய இச்சூத்திரம் சாதனத்தின் முதலில் வைக்கப்பட்டது.

(இ-ள்.) சத்து எதிராதலில் வாக்கையும் மனத்தையுங் கடந்த சிவசத்தியின் சன்னிதியில், யாவையுஞ் சூனியம் சுட்டி யுணரக்கூடிய அசத்தெல்லாம் பாழ்படும் (ஆதலால்) சத்தே யறியாது சத்தாகிய சிவம் அசத்தாகிய உலகத்தையறிவது இல்லை, அசத்து இலது அறியாது - அசத்தாகிய உலகம்அறிவில்லாத சடப்பொருளாதலால் சத்தாகிய சிவத்தை யறிவதற்கில்லை. (இவ்விதம் சத்து அசத்தையும் அசத்து சத்தையும் அறிவதற்குஇல்லையென்றுஉணர்ந்தபடியால்) இரண்டலா ஆன்மா - சத்துமல்லாது அசத்துமல்லாது சதசத்தாகிய உயிரே, இருதிறனறிவுளது, இரண்டு தகுதியையும் உடையது ஆகும் என்பது பொருளாம்.

இவ்விதம் ஆசிரியர் கூறுதலும், இறைவன் உலகமே உருவானவன், அத்துவாமூர்த்தி, இருநிலனாய்த் தீயாய் [illegible]ன் என்று கூறும் இயல்பினை நோக்குங்கால், உலகம் சத்தாகிய சிவத்தின் முன் சூனியமாகும் என்று கூறுவது சித்தாந்தமாகாது என்று சிவாத்துவித சைவர் மறுத்தலும்,சூத்திரத்தின் முதற்கூற்றையெடுத்து அவர்க்குப் போதிப்பாராயினர். "ஓ வாதியே! உலகத்துப் பொருள்கள் இதுகுடம், இது ஆடை என்று மக்களாகிய நம்மால் சுட்டி யறியப்படுவதுபோல், முதல்வனால் சுட்டியறியப்படுவதற்குவேறுநில்லாமையே ஆகும். அதனால் 'சத்து எதிர்யாவையுஞ் சூனியம்' அவை என்று கூறியதாகும். அவ்விதம் சத்து அசத்தையறியாது என்பதை, மெய்யினிடத்துப் பொய் எவ்விதம் முன்னிற்பது இல்லையோ அது போல் என்றுங் கூறினர். பின்னும் அதனையே விளக்குவார் போன்று, மெய்யாவது, எக்காலத்தும் நிலைபெறுவதாகிய இயல்புடையது எனவும், இடையே தோன்றி மறைவதாகிய இயல்புடையதே பொய்யெனவும் அறியாதாரே இவ்விதமெல்லாங் கூறுவர் என்று அறிவித்தற்கு,

"அன்னிய மிலாமை
யாற்கொன் றுணர்வின்று
மன்னியமிலா னசத்தைக்
காண்குவனே—லன்னியமாக்
காணு னவன்முன் கதிர்
முன்னிருள் போல
மாணு வசத்தின்மை
மற்று"

என்று கூறினர். அதாவது, தன்னுள் அடங்குவதாகிய பசு பாசங்களோடு வேற்றுமையில்லாமல், உடனாய் நிற்கும் முதல்வனுக்குச் சுட்டி யறியக் கூடியது ஒன்று இல்லையாதலால், அவ்வித தகுதியுடையானாகிய முதல்வன், அசத்தை யறியப்புகுவானாயின், அறிந்தவிதமே அறிவானல்லது, ஆன்மாக்

187156



களாகிய நம் போன்று வேறாக, சுட்டியறிபவனல்லன். ஏனெனின், சூரியன் முன் இருள் நில்லாததுபோல், அம்முதல்வன் முன்பு நன்மையில்லாத இப்பிரபஞ்சம் காணப்பட்டு நில்லாது ஆகலான் என்பதாம்.

இதுகேட்ட சிவசங்கராந்த வாதியானவன், சத்து என்பது அசத்தையறியாது ஆயினும், அசத்து என்றுகூறும் தநுகரண புவனபோகங்களுள் ஒன்றாகிய கரணம் விளக்குப்போல் வேறுபாடு இல்லாதுநிற்கும் ஆன்மசன்னிதியில், பெத்த நிலையினிடத்து சிவகரணமாய் நின்று சிவத்தையறியுமென்பது கண்ணாடியில் தோன்றும் நிழல்போல் ஆன்ம சன்னிதியில் அதனிடத்து அறிவு தோன்றுமென்பதும் பொருந்துமோ என்று கூறலும், அவனுக்குப் பதில் கூறுவார் போன்று,

"பேய்த்தேர் நீரென்றுவரும்
பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தே ரசத்தாகும்
பெற்றிமையின்—வாய்த்ததனைக்
கண்டுணர்வா ரில்வழியிற்
காணு மசத்தின்மை
கண்டுணர்வா ரில்ல
தெனக் காண்"

என்று கூறினர். அதாவது பாலைநிலத்தில் தோன்றும் கானல்நீர் என்னும் பேய்த் தேரை நீரென்று எண்ணி, அதனைக் குடிக்க வருகின்ற நீர்விருப்பமுடைய அறிவிலாத ஒருவனுக்கு, அக்கானல் நீர் தோன்றுமிடம் சமீபித்த வழி, அப்பேய்த்தேர் நீராக இல்லாது, பொய்யாக மறைந்து போவதுபோல், ஆசாரியனது, உபதேசமொழி கிடைக்காமையால் அவ்வுண்மையைக் கண்டு அறியமாட்டாதார்க்கே, அவ்வசத்தின் கண் அறிவுள்ளதாய் மதிக்கப்படும் சத்தாந்தன்மை காணப்படுமே யன்றி, ஆசாரியன் உபதேசச் சொற்கள் கிடைத்து, அசத்தினியல்பை ஆராய வல்லார்க்கு அவ்வசத்து அறிவில்லாததே யாகும் என்று அறிவாயாக என்பதாம்.

இது கேட்டவாதிகள் சிலர், 'சத்தும் அசத்தும் ஒன்றை யொன்று அறிவதில்லை என்று சாதித்தீர். இவ்விதம் இவ்விரண்டும் ஒன்றையொன்று அறியாதாயின், இவ்விரண்டையும் அறியும் வேறு பொருள் எது' என்பாரைப் பார்த்து, அவ்விரண்டற்கும் வேறாய் உயிர்க்கு ஒரு தன்மை யுண்டென்பதை விளக்கிக் காட்டி சதசத்தின் இயல்பை அளவு செய்து உணர்த்துவார், 'இரண்டு அலா ஆன்மா இருதிறன் அறிவுளது' என்று கூறியது, சத்தும் அசத்தும் தமக்குள் ஒன்றையொன்று அறியாமையால், இரண்டு விதமாகிய அறிவினையுடையது சத்தும் அசத்துமாகிய இரண்டும் அல்லாத ஆன்மாவே யாகும். அது எது போலெனின், ஒன்றையொன்று அநுபவித்து அறியாத சூரியனையும், ஒரு விஷயத்தையும் காணுங் கண்ணையே ஒக்கும். அதாவது, சூரியன் தோன்றிய வழி, அப்பிரகாசத்தைக் கொண்டு தான் காண வேண்டிய ஒரு பொருளைக் கண்ணனது காண்பதுடன் சூரியனையும் காண்பது போலாம். ஆதலால் ஆன்மாவானது, சத்தின் இயல்பையும், அசத்தின் இயல்பையும் அறியும் அறிவுடையது ஒன்றாகும் என்று கூறி அவ்வித ஆன்மாவின் தன்மை சாதிப்பார்,

"அருவுருவக் தானறிதலாயிழையா யான்மா
வருவுருவ மன்றாகு முண்மை- யருவுருவாய்த்
தோன்றி யுடனில்லாது தோன்றாதுநில்லாது
தோன்றன் மலர் மணம் போற்றெக்கு"

என்று அருளினர். அதாவது, நானுகி

நுணுகி நூல்களை யெல்லாம் ஆராயும் தகுதியுடைய உயிரொன்றே சத்து அசத்து என்னும் இரண்டினையும் அறியக்கூடியது ஒன்றாதலால், அவ்வுயிர் சத்தும் அசத்துமாகிய அவ்விரண்டுமில்லாது அவற்றிற்கு வேறாகும். அவ்விதம் ஆயின், அவ்விரு பொருளையும் அறியும் உயிர்க்குத் தன்னுடைய உண்மை இது வென்று அறியப்படுமோ அறியப்படாதோ என்று வினவுவாய் ஆயின், அறியப்படாததேயாம், அறியப்படும் என்று கூறில் தன்னோடு சேர்ந்து மூன்றையும் அறிவது என்று கூறாது, அவ்விரு பொருளையே அறிவது என்று கூறியது பொருந்தாதது ஆகும். அறியப்படாததெனில், அறியப்படாதபொருள் ஒன்று சூனியமாகிவிடும் என்று கூறி அவ்வான்மாவினது உண்மை, சத்தும் அசத்தும் போல விளங்கித் தோன்றி அவற்றோடு ஒப்ப நிற்பதும் அல்லாது, காணப்படாத சூனியமாய் நிற்பதும் அல்லாது, மலரினிடத்தேவாசமானது, அதனிடத்தே அடங்கித் தோன்றுமாறு போல, சத்திலும் அசத்திலும்சார்ந்த தன்வண்ணமாய் அடங்கித் தோன்றுவதோர் இயல்பாகும். ஆதலால்அவ்வுயிரானது, இவ்விரண்டனைப் போலத் தனித்து அறியப்படுவது ஒன்றல்லாது அவ்விரண்டனையும் அறியு முகத்தால் அறியப்படுவது ஒன்றாகும் என்றனர்.

அவ்விதங் கேட்டவாதிகள், அறியுந் தன்மையுடைய உயிர் சிவசத்தோடு ஒப்பாக நிற்றல் கூடாதோ என்னலும், அதற்குப் பதில் கூறுவார் போன்று,

"மயக்கமதுற்று மருந்திற் றெளிந்தும் [மலை<br>
பெயர்த்துணர் நீ சத்தாகாய்பேசி—லசத்து<br>
நீயறிந்து செய்வினை கணீயன்றி வேறசத்துத்<br>
தானறிந்து துய்யாமை தான்"

என்று கூறினர். அதாவது, உன்னை விளக்குதற்குக்கூடிய வியஞ்சகமில்லாத காலத்து, ஒரு விஷயத்தை இது வென்று அறியமாட்டாமல் மயக்கத்தையடைந்தும், பிறகு பசி நோய்வந்த காலத்து, அன்னத்தை யுண்டு அப்பசி நோய் தீர்ந்தாற்போல், அடைந்த மயக்க நோய்க்கு மருந்தாகிய வியஞ்சகம் கிடைத்த விடத்து, அம்மயக்கம் நீங்கி, அவ்விஷயத்தை இதுதான் என்று நிச்சயித்தும், இவ்விதம் மாறி மாறி மயங்கியும் உணர்ந்தும் வருகின்ற நீ, சிவசத்தோடு ஒப்பாவாயல்லை; அவ்விதம் ஒப்பாவாதவனாகிய யான், அசத்தின் தன்மை யடைவேனோவெனில், வியஞ்சக மிருந்த விடத்தும், நீ முன் அறிந்து செய்த வினைகளை அவ்வியஞ்சகத்தின் உதவியில்லாமலே நீயே யறிந்து அனுபவிக்க வல்லவனாயிருக்கின்றாயாகையால் உன்னின் வேறாகிய அசத்தாகியபாசம் அவ்விதம் அறிந்து அநுபவிக்கமாட்டாமையால், அப்பாசத்தோடொப்ப அசத்துமாவாயல்லை. எதுபோலெனின், சத்த குணமுடைய ஆகாயம் போல, வியஞ்சகமுள்ள விடத்து, விஷயத்தை யறியும் ஆற்றலுடைமையும், அது இல்லாத விடத்து அதையறியும் ஆற்றலின்மையுமாகிய இரண்டுமுடைய ஆன்மாவாகிய நீ, அவ்விரண்டற்கும் அதாவது சத்திற்கும் அசத்திற்கும் வேறாய் சதசத்தாம் தன்மையுடையை என்பதாம். இதெல்லாங் கேட்டவாதியானவன், உயிர்க்கு வியஞ்சகமில்லாத விடத்து மயக்க முண்டென்றீர். அவ்வித உயிரோடு சம்பந்தமுடைய முதல்வனுக்கும் மயக்கம் உண்டோ? அம்மயக்கந்தான் உயிர்க்கு எக்காலத்து வந்தது? என்று வினவுதலும், அதற்கு விடை கூறுவார் போன்று,



"மெய்ஞ்ஞானந் தன்னில் விளையாத சத்தாத<br>
லஞ்ஞானமுள்ள மணைதல்காண்—மெய்ஞ்<br>
[ஞானந்<br>
தானே யுளவன்றே தண்கடனீ ருப்புப்போற்<br>
றானே யுளமுளவாத் தான்"

என்று கூறினர். அதாவது, "வாதியே! மேற்சொல்லிய மயக்கமாவது, ஒரே தகுதி யுடையதாகிய அறிவென்று கூறும் சிவசத்துக்கு எதிர், சூரியன் முன் இருள் போல நிலைத்தல் கூடாதாதலால், அச்சிவத்தினிடத்து அம்மயக்க மானது உண்டாகாமல், அச்சிவம் என்று உள்ளதோ அன்று முதல் அதனிடத்துப்பொருந்துதற்கு உரிமையுடைய உயிர்களிருத்தலால், (ஆண்டவனைப்பற்றாது)அவ்வுயிர்களைப் பற்றி நிற்குமென்றும் அது உப்பானது குளிர்ந்த கடலினிடத்து உண்டாவது இல்லாமல் அக்கடலிடத்து இருக்கும் நீரொடு கலந்திருப்பதைப் போல் நிற்குமென்றும் அறிவாயாக என்றனர் என்பதாம்.

இச்சூத்திரம் சத்து, அசத்து, சதசத்து என்று கூறும் மூன்று பொருள்களையும் விளக்கியதுடன், சத்து அசத்தைப் பாராது என்றும், அசத்து சத்தைப் பாராது என்றும், இரண்டையும்பார்த்து அவைகளோடு இருப்பது சதசத்து என்றும், பதிபாச பசுவின் தன்மையைவிளக்கிக்காட்டியதாயிற்று. இதனால், சாதனத்தைச்செய்து பயனடைதற்குரிய ஆன்மாவின் தன்மையை அறிந்ததாயிற்று.

ஏழாஞ் சூத்திரம் முற்றிற்று.

---

# முருகன் நுண்மாண்

## (Esoteric Murugan)

[தி. கு. கி. நாராயணசாமி] உரிமை பதிவு செய்யப்பட்டது

### உருவம்

"சீர்க்குமரேசன் கொண்ட<br>
திருப்பெரு வடிவந்தன்னில்<br>
ஏர்க்குறும் ஒளியுஞ்சீரும்<br>
இளமையும் எழிலும்எல்லாம்<br>
ஆர்க்குள வுலகில்அம்மா!<br>
அற்புதத்தோடும் பல்காற்<br>
பார்க்கினுந் தெவிட்டிற்றில்லை<br>
யின்னுமென் பார்வைதானும்"

இறைவன் உருவம் பெயர் தொழில் ஒன்றுமின்றிப் பரவியவன். இந்நிலவுலகில் விரவிய உயிர்க்கு வீடு தந்திடுங் கருணையால், உலகைப் படைத்து காத்து அழித்தும் அருள் செய்யும் அவன் ஓர் இலக்கியம்; (இலக்ஷியம்) அவனிடத்துள்ளது இலக்கணம். (இலக்ஷணம்) இவ்விலக்கணம் பொது சிறப்பின. இதனை நிரலே தடத்த சொரூப இலக்கணமென்பர். அவனுக்கு அளவுபடா உண்மை, அறிவு, இன்பம் இருப்பது சிறப்பு. உருவம், பெயர், தொழில் ஏற்றல் பொது. மற்றும் அவன் உயிர்கட்கு போகம்தந்து அதன் இழிவினை உணர்த்தி அதனினும் மேம்பட்ட வீடு பேற்றில் விழைவு வரச்செய்து அதற்குரிய சாதனம் தந்து ஒழுகவைத்து வீடு நல்க உருவம்கொள்வான். அவன் உருவும் அருவும் உருவருவுமாவன்! மிகும் அருளால் மேனி சாற்றியவன்!

ஞானமே உருவாகிய நாயகன் ! இவற்றைக் கந்தம் கூறுதல் காண்க.

"உருவோடு தொழில்பெயர் ஒன்று மின்
பாவியர் அவை பரித்து நிற்பது [றியே
விரவிய உயிர்க்கெலாம் வீடு தந்திடுங்
கருணையதே யலாற் கருமம் யாவதே "
—உற்ப - திருவவ - 34.

"தன்னைநேரிலாப் பரம்பொருள்
தனியுருக் கொண்ட
தென்ன காரணம்?
என்றியேல் ஐந்தொழிலியற்றி
முன்னையாருயிர்ப் பாசங்கள்
முழுவது மகற்றிப்
பின்னைவீடுபேறு அருளுவான்
நினைந்த பொருளே "
—மகே - சூரன் அமை - 119.

" ஞானந்தான் உருவாகிய
நாயகன் இயல்பை
யானுநீயுமா யிசைத்து
மென்றாலஃ தெளிதோ ?
மோனந்தீர் கலாமுனிவரும்
தேற்றிலர் முழுதுந்
தானுங்காண்கில னின்னமுந்
தன்பெருந் தலைமை"
—மகே - சூரன் அமை - 128.

கருமகாரணத்தால் தோன்றிய நம்முடல் இரதம் (மச்சை), உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம் ஆகிய எழுவகைத் தாது உடையது. மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை ஆகிய ஆறு அத்துவாக்கள் (வழி) உயிர்களைக் காப்பான் கருதி அருள் காரணத்தால் தோன்றிய நாயகன், திருவடிவாய் நிற்கும்.

"மந்திரமே சோரியா வான் பதமே மாமுடி [யாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந் [தனையா
லொத்த புவனந் துருவே யுரோமமாத்
தத்துவங்களே சத்ததா துவா—வைத்த
கலையே அவயவமாக் காட்டு மத்துவாவி
னிலையே வடிவமாய் நின்றோய் "
—கந்தர்கலிவெண்பா.

அவன் உள்குவார் உள்ளத்துள்ளே யவ்வுருவாய் நிற்கின்ற அருளாய்த் தோன்றுவான்' கருதுவார் கருதும் உருவினன். அப்பெம்மான் பிறவான் இறவான்.

இறைவன் பல காலத்தில் பலஇடத்தில் பல அன்பர்கட்குப் பல்வகைப் பேறுகளை அளிக்கக்கொண்ட திருவுருவங்களில் முருகன் என்பது ஒன்று. ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன். பேசில் அவன் பரனோடு பேதகனல்லன். மாற்ற மனங்கழியநின்றான். எங்கும் நீக்கமற நின்று எல்லாவற்றையும் தன் அகத்தே தாங்கலின் பிரமம் எனப்பட்டான். இஃது யோகிகட்கு புருவமத்தியில் ஆயிரம் இதழ்களையுடைய தாமரைமேல் தேவ அங்குஷ்ட பிரமாணத்தில் சோதியாக தரிசனந்தரும். அச்சோதியே குழவியாக விசித்திர உருவொடு இவ்வுலகுய்ய வரும்.

" அருவமு முருவு மாகியநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தன னுலக முய்ய"
(உற்ப - திருவவ - 22.)

இந்நுண் பொருளை உறுதிப்படுத்த முருகன் அவதாரம் இலக்கியமாயிற்று. மனவாசங் கடந்தவன் பரசிவத்தின் புருவமத்தியில் அழற் கண்ணினின்று சோதியாகத் தோன்றி, நிலன், நீர், அனல், அனிலம், வான் ஆகிய ஐம்பொருள் உறவுகொண்டு சரவணப் பொய்கையில் தாமரையின்மேல் ஆறு முகமும், பன்னிருகையும் கொண்டு



முருகன் அவதரித்தான் என்பது வரலாறு.

" மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினால் அளக்கொணாத
நிறைவுடன் யாண்டு மாகி
நின்றிடு நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி
அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப்போதின்
வீற்றிருந் தருளி னானே.
—(உற்ப - திருவவ. 96.)

உருவம் வந்தபிறகு பெயராதலின், இனி பெயர் பற்றி ஆராய்வாம்.

" வேதக் காட்சிக்கும்
உபநிடதத் துச்சியில் விரித்த
போதக்காட்சிக்குங் காணலன்
புதியதிற் புதியன்
மூதக் காரக்குமூ தக்கவன்
முடிவிற்கு முடிவாம்
ஆதிக்காதியாய் உயிர்க்குயிராய்
நின்ற வமலன்."
(தொடரும்)

---

# கடவுள் நிச்சயமும் அவரை வழிபடும் விதமும்

[T. இராமசாமி, மணலி விடுதி மாணவன்]

## தோற்றுவாய்

கடவுள் வழிபாடு யாவருக்கும் அத்யாவசியமாகும். நம்மவர்கள், தாங்கள் இயற்றி வைத்துப் போந்த நூல்களுக்கெல்லாம் கடவுள் வணக்கம் செய்தும், மற்றும் அவர்கள் செய்யப்புகும் காரியங்களுக்குமுன் கடவுளை வழிபட்டுச் செய்து முடித்தும் இருத்தலால் கடவுள் வழிபாடு இன்றியமையாதது என்பது துணிபு. அஃதினும் மாணவர்கள் செவ்வனே கல்வி கற்று அக்கல்வியின் பயனளவைக் கொண்டு நற்பேற்றைத் தரத்தக்க இறைவன் தாளினை என்றும் மறவாது வணங்கல் வேண்டற்பாலது.

" கற்றதனாலாய பயன் என்கொல் வால்அறி
நற்றாள் தொழாஅர் எனின் " [வன்

என்னும் மூதுரை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. ஆகவே கடவுள் வழிபாடு, மாணவர்களுக்கு மட்டுமேயன்றி ஏனையவர்களுக்கும் இன்றியமையாதது என்பது தேற்றம்.

இனி, கடவுள் ஒருவர் உண்டென்பதைப்பற்றியும் அக்கடவுள் எங்ஙனம் உயிர்களிடத்தில் தமதருளை யூட்டுகின்றார் என்பதைப்பற்றியும், எந்த முறையிலே எந்தவிதமாகப்பாவித்து அவரை வழிபடல் வேண்டுமென்பதைப் பற்றியும் நாம் ஆராய்தல்வேண்டும். நம்மனோர் மூன்றுவித அளவைகள் அல்லது சாதனங்களைக் கொண்டு தமக்குத் தெரியாத ஒன்றை நிச்சயப்படுத்தினர். அஃதாமாறு, காண்டல், கருதல் அல்லது அநுமானம், உபமானம் என்பன. நாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கும் இவ்வித சாதனங்களைக் கொண்டே நிச்சயம் செய்தல்வேண்டும். ஆகவே, இம் மூன்றனையும் முறையே நன்கு ஆராய்ந்து அவைகளுள் எது நம் விடயத்திற்குத் தக்கது என்று அறிதல்வேண்டும்.

**காண்டல்:**—காண்டலாவது காட்சியறிவுக்குக் காரணம். அறிவுக்குக் காரணமாகாத அறிவு காட்சியெனப்படும். அங்ஙனம் உள்ள காட்சி இந்திரிய விடய சம்பந்தத்தால் தோன்றும் ஞானம்.

அநுமானமாவது :— அநுமானமாவது அநுமிதிக்குக் காரணம். அநுமிதியாவது ஆராய்ச்சியின் முகத்தானே தோன்றும். அறிவு ஆராய்ச்சியாவது வியாத்தியான் அல்லது வியாப்பியத்தான் விசேடிக்கப்பட்ட அருமைத் தன்மை. ஞானம் தீயின் வியாப்பியமாகிய புகையுடையது. இம்மலை என்னும் ஞானம் ஆராய்ச்சி, அதனாற் றோன்றுவதாகிய மலை புகையுடைத்து என்னும் ஞானம் அநுமிதியாகும்.

வியாத்தியாவது, யாண்டு யாண்டுப் புகை ஆண்டு ஆண்டுத் தீ என்னும் உடன் நிகழ்ச்சி நியமம். பக்க தருமத் தன்மையாவது வியாப்பியம் மலை முதலியவற்றினுளதாதல். அநுமிதியென்பது அநுமானத்திற்கிலக்கணம். அவ்வித அநுமானமும் தன் பொருட்டநுமானம் பிறன் பொருட்டநுமானம் என இருவகைப்படும். தன் பொருட்டநுமானமாவது தனது அநுமிதிக்குக் காரணம் தானே யடுத்தடுத்துக் காண்டலான். யாண்டு யாண்டுப் புகை ஆண்டு ஆண்டுத் தீ என அடுக்களை முதலியவற்றின் கண் வியாத்தியைக் கவர்ந்து கொண்டு மலையினணிகட் சென்றான். ஆண்டுச் சென்றுழி தீயின் கண் ஐயமுற்று மலையின்கட் புகையைக் கண்டு யாண்டு யாண்டுப் புகை ஆண்டு ஆண்டுத் தீ என வியாத்தியை நினைக்கின்றான். அதன் பின்னர் தீயின் வியாப்பியமாகிய புகையுடையது இம்மலை என்னும் ஞானம் இவனுக்குத் தோன்றும்.

பிறன் பொருட்டனு மானமாவது: தான், புகையால் தீயை அநுமிதித்துணர்ந்து பிறனுக்கு உணர்த்தும் ஞானம்.

உபமானப் பிரமாணம்:— இதற்குக் காரணம் ஒப்புமையறிவு. ஆமா வென்னும் சொற்குப் பொருளறியாதான் ஒருவன் யாங்காயினும் காட்டகத்துள்ளானாகிய ஓராண் மகனால் ஆவினையொக்கும் ஆமா எனக் கூறக் கேட்டுக் காட்டுட் சென்று அவன் காட்டகத்து மகனால் தெரிந்து கொண்ட தொடர்மொழிப்பொருளினை நினைந்து ஆவொப்புமை யுடைய பிண்டத்தைக் காண்கின்றான். அதன் பின்னர் இது ஆமா என்னும் உவமிதியறிவு அவனுக்குத் தோன்றும். இஃதே உபமானப் பிரமாணமாகும்.

நாம் கடவுளை நிச்சயம் செய்வதற்குக் காண்டலறிவினால், அறியலாமோவெனின் முடியாது. என்னணமெனின், உலகத்துப் பொருள்களைச் சார்ந்த நாம் உலகத்துப் பொருள்களுக்கு வேறுபட்டு நின்ற கடவுளின் நிலையை அவன்றன் ஞானானந்தத்தைப் பெறுமளவும் காட்சியறிவானறிதல் எளிதன்று. உபமானத்தைக்கொண்டு அறியக் கூடுமோ எனின் அங்ஙனமும் நிலை பெறமாட்டாது. உவமிதியறிவுக்குத் தெரிந்த ஒன்றைக் கொண்டு, சாதனங்களின் உதவியினாற்றான் நிச்சயம் செய்தல் கூடும்.

ஒன்றுந் தெரியாத நாம்உவமிதியறிவைக்கொண்டு நிச்சயித்தல் முடியாது. ஆயினும் நாம் முன்னர் கூறிய மூன்றனுள் ஒன்றைக் கொண்டுதான் நியமனம் செய்தல் வேண்டும். அம்மூன்றனுள் காட்சி, உவமதி ஆகிய இரண்டும் நம்விடயத்திற்குப் பயன்படாவென்பதையும் தெரிந்தோம். ஆகலின்மூன்றனுள் இரண்டைத்தவிர்த்து நிற்கும் அநுமானத்தைக் கொண்டுதான் நிச்சயித்தல்வேண்டும். அஃதாமாறு : கடவுள் என்பது கடத்தல் என்னும் தொழிற் பெயரைக் குறிக்கின்றமையின், அஃதின் தொழிலாகு பெயரினால் கடத்தலாகிய தொழிலையுடைய ஒன்றுஎன்று பொருள்பெற்று கடந்து நின்றவர் எனவிரியும். அங்ஙனமுள்ள கடவுள் மெய்யறிவினை உடையவன் எனவும் கூறுவர் பெரியோர். "வால் அறிவன்" என்பதை நுண்ணறிவானறிக. இந்நிலையில் விளங்கா நிற்கும் கடவுளை நாம் நேரில் காண்பது அரிது. "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றபடி அவனுடைய அருட்டிறத்தைப் பெற்றமாத்திரையே தான் அவன்றாளினைக் கண்ணுறுதல் கூடும்.

ஆயினும் சில அறிவிலிகள் நேரில் காணாதவொன்றை எங்ஙனம் நிரூபித்தல் போதரும்? என்று கடாவலாம். கடவுள் ஒருவருளர் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் மல்கிக் கிடக்கின்றன. புகையைக் கண்டவிடத்துத் தீ உண்டு என்று தன் பொருட்டநுமானம் பிறன் பொருட்டநுமானம் என்பவற்றான் முன்னமே தெரிந்தோம். மற்றும் நாம் ஒருகுடத்தைக் கண்டவளவில் தன்னைக் காரியமாக்கின கருத்தா ஒருவன்வேண்டுவது அவசியம் என ஏற்படுகிறது. எனவே, உலகத்துப் பொருள்கள் யாவும் தலைவன் ஒருவன் இன்றித்தாமே இயங்கமாட்டா. அங்ஙனமியங்கமாட்டாத பொருள்களை யியக்கிவிக்குந் தூய்மை நிகர்த்தப் பொருள் எஃதோ அஃதே கடவுள் அல்லது மெய்யறிவினையுடைய பரம்பொருள். உலகத்துப் பொருள்கள் யாவும் அவன், அவள், அது, என்பனவற்றில் அடங்கும் என்பது ஆன்றோர் கருத்து.

" அவன் அவள் அதுவெனும் அவைமூவினை [மையில்
தோற்றிய திதியே யொடுங்கிமலத்துளதாம்
அந்தம் ஆதியென்மனார் புலவர்"

என்னும் சிவஞானபோத சூத்திரத்தானுணர்க.





அதாவது, ஒருவன், ஒருத்தி ஒன்று என்று சுட்டியறியப்படும் சகல உயிர்ப் பொருள்களும் மற்றப் பொருள்களும் பிறப்பு, இறப்பு, இருப்பு என்கின்ற மூன்றுவிதத் தொழில்களினுழலுகின்றமையான் ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட பொருள்களேயாம்.

அவைகளில் உயிருள்ள பொருள்கள் யாவும் தம்முடைய செயல்களால் வரும் கர்மத்தை ஒழிக்கும் பொருட்டானே ஒடுங்கி, தம்மை அநாதியாகத் தொடர்ந்திருக்கும் அஞ்ஞான இருளாகிய ஆணவமலத்தில் தாம் இருப்பதால் அதை யகற்றிக்கொள்ள மீளமீளப் பிறவியை யடைகின்றனவென்பது கருத்து. உலகத்துப் பொருள்களில் சில ஒரு காலத்தில் தோன்றி சற்று நீடித்து மற்றொரு காலை அழிவுறுகின்றதால், அதன் நீடூழி காலத்தைக் காரணமாகக் கொண்டு அப்பொருள்களை இயற்கையென்று உலக வழக்கில் வழங்கினும், உண்மையில் "தோற்றம் உண்டேல் மரணமுண்டாம்" என்றபடி ஒரு பொருளுக்குத் தோற்றம் இருக்குமேல் அதற்கு அழிவு உண்டென்றும், அங்ஙனம் தோற்றமும் அழிவும் உடையபொருள்களுக்குக் கருத்தா ஒருவன் வேண்டுமென்பதும் தருக்கநூற்றுணிபு.

எனவே உலகத்துப் பொருள்கள் அனைத்தும் தத்தம் அலுவல்களைச் செவ்வனே இயற்றிக்கொள்ளும் வண்ணம் கருத்தா ஒருவன் வேண்டுமென்றும், அவனன்றி எப்பொருளும் இயங்கமாட்டா என்றும் அவனே மெய்யறிவினையுடைய கடவுள் என்று முணற்பாலது.

(தொடரும்)

# திருவூடல்

[இராமநாத சிவாசாரியார், கண்டனூர்]

பரமாப்த பதியாகிய பசுபதி லோகாநுக்கிரகமாகத் திருக்கோயில் கொண்டு விளங்கா நின்ற தலங்கடோறும் மகோத்ஸவ காலங்களில் அபக்குவான்மாக்கள் பக்தி முதிர்ச்சி யடையும் பொருட்டு, முற்காலத்தில் பரமன் நடாத்திய லீலைகள் பலவும், திருவாலவாய், திருவண்ணாமலை, திருமாகாளம், திருச்செங்காட்டங்குடி முதலிய பல தலங்களிலும் நடத்திக் காட்டப் பெறுகின்றன. அந்தந்தத் தலபுராண சம்பந்தமான லீலைகள் ஆங்காங்கு நடைபெறுவதாயினும், எல்லாச் சிவாலயங்களிலும் திருக்கல்யாணம், திருநடனம், ஏகான்மவாதவிருடிகளை வென்று அனுக்கிரகித்த பிக்ஷாடனோத்ஸவம், திருவூடல் முதலிய உத்ஸவங்களை நடத்த வேண்டுமென்பது சிவாகம விதி.

மகோத்ஸவத்தில் அங்குரார்ப்பணம், இரக்ஷாபந்தனம், துவஜாரோகணம், திருக்கல்யாணம் சிருஷ்டியையும், வாஹநாரோகணம், ஹோமம், பலிப்பிரமாண மிவைகள் திதியையும், இரதோத்ஸவம்,கிருஷ்ணகெந்த மகோத்ஸவம் சூர்ணோத்ஸவ மிவைகள் சங்காரத்தையும், மௌனோத்ஸவம் திரோபாவத்தையும், சத்தி யுத்ஸவம் (திருவூடல்) அனுக்கிரகத்தையுமாகப் பஞ்சமகா கிருத்தியங்களை உணர்த்தும். இவ்வனுக்கிரகரூபமான திருவூடலைப் பற்றிச் சிவாகமங்களிற் கூறுவதாவது :—

“வ்யாவஹாரி கவாக்யஞ்சஸ் ராவயித்வாது தர்மவித், தேவிப்ராணயகோ பஞ்சவ்ய போஹ்யை வாலயம் விசெத்”

என்பதனால் அம்பிகை ஊடலாகக் காரணத்தையும் அதற்கு இறைவன் கூறும் சமாதானத்தையும் தேவியின் எதிர் மொழியையும் பரமனின் பிரார்த்தனையையும் சிரவணம் செய்வித்து அம்பிகையின் கோபத்தைப் போக்கி ஆலயமடைக வென்றதனாலும் பிறவற்றாலும் ஊடலுத்ஸவப் பெருமையும் வசனம் (புராணம்) வாசித்தலின் அவசியமும் நன்கு துலங்கும். அவ்வசனமும் சந்தர்ப்பத்திற்கு ஏதுவாகவும் புராணாதிகளி லுள்ளனவாகவும் பத்தியை யுண்டுபண்ணக் கூடியதாகவும் முரணின்றியு மிருத்தல் வேண்டுவதவஸ்யம். இப்படிக்குள்ள சரித்திரம் பலவுள. (85) செய்யுட்களால் வடமொழியிலாக்கப்பட்ட சரித்திரமுமொன்றுளது.

பரமசிவன் பிக்ஷாடன வேடமும் விஷ்ணு மோகினி வடிவுங்கொண்டுவர ஏகான்ம வெறி கொண்ட தாருகாவனத்து இருடிகளின் தவமும் பெண்களின் மனவுறுதியுங் கெட்டு அதனால் மிக்க வெகுளி கொண்ட விருடிகள் வேள்வி யாற்றி விடுத்த முயல்களை மிதித்தும் புலியை யுரித்துடுத்தியும் மற்றுஞ் சிலவற்றைக் கையிற்றாங்கியும் அன்னவர்கட்குப் புத்தி புகட்டித் திருநடஞ் செய்து காத்ததைத் தானின்றி நடாத்தியதற்காக அம்பிகை ஊடலாக, சிவபிரான் தேவியைச் சமாதானப்படுத்தி அன்னையின் வேண்டுகோளுக் கிணங்கி நடாத்திய திருநடனமே ஸப்த தாண்டவத்தில் மூன்றாவதான கௌரீ தாண்டவமெனப்படு மென்பதனாலும், “நடேசஸ்யோத்ஸவஞ் சூர்யாத் கௌரீலீலா சமன் விதம்” என்கிற சிவாகமப் பிரமாணத்தாலும், இம் மகோத்ஸவம் நடேசப் பெருமானுக்கானதாக விதிக்கப் பட்டதென்க.



ஊடலான தேவியைச் சிவபிரான் வேண்டி சமாதானப்படுத்தினாரென்பதை வடமொழி ஸ்காந்தம் கேசிமுனிவர் இறைவனின் (௬௪) ரூபபேதங்களை துதித்தவிடத்து (௬௨) வதாகப் பிரார்த்தனா மூர்த்தமென்று விளக்குகிறது.

இம்மகோத்ஸவத்தில் “கதளீஸ்தம்ப சம்யுக்த கெணிகா ஹஸ்தலீலயா: சிவபக்தப் பிரஜானாஞ்சதா டனஞ்ச பிருதக்பிருதக்” என்பது போன்ற பிராமண்யத்தினால் ருத்திர கணிகையின்(வேசயரல்லாதார்) கையில் வாழைமட்டை கொண்டு பக்தஜனங்களை அடிப்பிக்க வேண்டுமென்றும், அதனால் அஞ்ஞான நாசன மேற்படுமென்ற பயனும் கூறப்பட்டிருக்கின்றன.

எக்காலத்தும் சுதந்திரமில்லாத ஒரு அபலையினிடமாகப் பலர் பார்த்துப் பரிகசிக்கக்கூடிய நிலையில் தீரபுருஷனொருவன் ஆணவத்தை விட்டு அடிபடவேண்டுமானால் “நாமார்? நம்மையடிப்பவரார்? அடிக்கக் கட்டளையிட்டதெது? அடிபடுவதெது? பௌதிக சரீரமல்லவா நமக்கும் சரீரத்திற்கு முள்ள சம்பந்தம் பழுத்த மரத்தில் புசிக்கவந்த கிளிபோல கர்ம பலனை யனுபவிக்க ஆன்மா சரீர சம்பந்தப்பட்டதன்றி வேறென்ன? அநித்தியமாகிய தேகாபிமானக் கேடால் சிவாஞ்ஞையைத் தள்ளலாமா? வென்பனபோன்ற விசாரத்தால் தேகத்தின் நிலையாமையை யறிந்தாலன்றி எப்படி உடன்படுவன்? இதனால் சரீரான்ம சம்பந்தம் கர்மானுபவார்த்தமென்றும், சரீரமனித்திய மென்றும் அது நிமித்தமாக அளவு கடந்த அபிமானம் வைத்தலடாதென்றும் மீண்டும் தேக சம்பந்தப்பட்டுழலாமல் முக்கரணங்களாலும் இறைவனை வழிபடவேண்டுமென்றும் அவ்விதி விலக்குகளை விளக்கும் பதிநூல்கள் சிவாஞ்ஞை யென்றும் அதனைப் புறக்கணித்து விடுதலை பெற முடியாதாகையால் நன்னூல்வழி சன்மார்க்க மடையவேண்டு மென்றும் தெரிந்துகொள்ள ஏதுவேற்படுவதால் அஞ்ஞானம் போமென்று பிரயோஜனங் கூறப்பட்டது போலும்.

மேலும் சதுரங்கலீலையில் இச்சாமாத்திரையானே தோல்வியுற்ற பரமன் குதர்க்கம் பேசிய காரணத்தால் தேவி சினமுற்றவளாய் இறைவனின் தடத்த இலக்ஷணங்களிற் சில கூறி நிந்திக்க அம்மையின் சின மொழியச் சுந்தரருக் கொண்ட இறைவனின் சாயாரூபமே வன்றொண்டப் பெருமானாதலாலும் தம்பிரான் றோழரென்று வழங்கப்படுவதால் சுந்தரர் சகமார்க்கமாக பக்தி செய்தாரென்றும் உலகியலில் ஸ்நேகிதரைக் கொண்டு அந்தரங்க கார்யங்களை முடித்துக் கோடல் வழக்காதலாலும் நன்றி செய்தாரொருவற்குச் சந்தர்ப்பம் வாய்த்தபோது எத்தனை கஷ்டம் வந்தெய்தினும் பின் வாங்காது பிரதியுபகாரம் செய்து தீர வேண்டுமென்பதை அறிவுறுத்தும் பொருட்டு அந்நாள் பரவையூடலைப் பரமன் தீர்த்தவாறு அம்மை யூடலைச் சுந்தரர் தீர்த்ததாகக் கொள்வது வழக்கத்தில் வந்தது போலும். இவ்வுத்ஸவத்தின் ஒவ்வோரம்சமும் விரிக்கிற் பெருகுமாதலாலிதை இஃதுடன் ஸ்ரீ சுந்தர திவ்யசரணாரவிந்தார்ப்பணம் செய்து முடிக்கிறேன்.

“சிவநேசன்”

# பெரிய புராணமும் சாதியும்

[காருடை சு. சூரியமூர்த்தி பிள்ளை]

"உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

மண் உலக முறையும் மாந்தர் இயல்பும் மாறுவன, கெடுவன, திருந்துவன, சிறந்து பெருகுவன. இம்முறையைக் கொள்ளாத நாடும் மனிதரும், எங்கும் என்றும் இலர். நமது நாட்டிலும் இவ்வாறு நான்கு முறைகளும் நிகழ்ந்தன என்பதை, ஆகமங்கள் எல்லாமும் ஒருங்கே அறிந்த நந்தி எம் குருத் தலைவரே அவற்றில் ஐயுற்றார்; பின் தெளிந்தார் எனக் கூறும் அறிவு நூல் வரலாறும், பிருகு முதலிய அறநிலை நின்றார் பதிநிலை மயங்கி முத்தொழிற் கடவுளரைச் சோதித்தார் என்று கூறும் பாகவதப் போக்கும், அறிவு நூலைக் குழப்பம் நீக்கிக் கோவை செய்ய வியாதன் பிறந்தான் எனக் கூறும் பாரதக் கதையும் அத்துவித (ஒன்றெனத் தோன்றும் கலப்பு) மொழிக்கு ஆக்கப்பொருள் கூறுவான் வந்த நீலகண்டர், சங்கரர், இராமாநுஜர், மாத்துவர், மெய்கண்டார் இவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளும் சைவ நாயன்மாரிற் சிலரும், திருமாலடியார்களான ஆழ்வார்களிற் பலரும், உலகம் மயங்கிய காலத்திற்றான் அதை நல் நெறிப்படுத்தத் தோன்றினாரென்று கூறும் சைவ வைணவ நூல்களும் வெள்ளிடை மலையாக விளக்குவன. உலகம் நல் நிலை, நல்முறைகளினின்றும் பிறழ்ந்த ஒரு காலத்து, இவ்வாறே பெரிய புராணமும் தோன்றிற்று என்ப. பெரிய புராணத்துச் செந்நெறி உணர்ந்த நல் நிலைப் பெரியர் வாழ்ந்த முறை நன்கு பேசப்படுகிறது. பெரியோர் வழிச் செல்லுதல் அறிவுக்குரிய தொழில்.

நமது நாடு சாதிப் பிரிவால் தயங்குகிறதென்றும் சாதியால் மக்களுக்குள் ஒற்றுமை உண்டாக இடமிலது என்றும் நம்மவரும் பிறரும் பேசக் கேட்கிறோம்; எழுதப் பார்க்கிறோம். இச்சமயம், பெரிய புராணமானது சாதியை எவ்வாறு போற்றுகிறதென்பதை அறிவதே எடுத்துக் கொண்ட ஆராய்ச்சியாகும். அறிந்த பின் அறிந்தாங்கு ஒழுகுதல் அறிவு கொண்ட பயனாகும்.

உணவிலும், வணங்கும் இடம்வரையறுத்து நிற்பதிலும், மணங் கொள்ளலிலும், பொதுப் பெயர் கூறலிலும், இவற்றோடு ஒத்தவைகளிலும் நம் நாட்டு மக்கள் சாதி கொண்டு வாழ்கிறோம். இதற்கு முன்னவரிட்ட வரம்பு அறிவுப் பொருத்தமாயின் கொள்ளற் குரியதாகும். நம் நாட்டுள் தொன்று தொட்டோ இடையிட்டோ எவையும் வடமொழிக்கண் காணப்படவேண்டும் என்னும் கொள்கை நிலவுகிறது. அவ்வாறு பெரிய புராணமானது வடமொழி நூல் வழி வந்தது என்னின் வடமொழிச் சாதி ஒழுக்கமும் பெயரும் கொள்ளற் குரியன. வடமொழியில் பெரிய புராணக் கதைகளை விரிக்கும் நூல்கள் கந்தமாபுராணத்துள்ள அகத்திய உபமன்னிய பக்த விலாசங்கள் என்ப. நூல் வந்த வழி கூறப் புகுந்த



பெரிய புராணம் திருமலைச் சிறப்பு 38-39-ம் செய்யுள்களில் :

'மற்றிதற்குப் பதிகம் வன்தொண்டர்தாம்
புற்றிடத் தெம்புராணர் அருளினால்
சொற்றமெய்த் திருத்தொண்டத் தொகை [யெனப்
பெற்றநற் பதிகம்தொழப் பெற்றதால்.

அந்தமெய்த் திருப்பதிகத் தடியார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண்டார்நம்பி
புந்தியாரப் புகன்ற வகையினால்
வந்த ஆறு வழாமல் இயம்புவாம்.

என்று காட்டிக் கந்தமா புராண இருபக்த விலாசங்களும் (வடமொழி நூல்கள்) தனக்குரிய முன் நூல்கள் அல்ல என்றும் : நம்பி ஆரூர் செய்த திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பி செய்த திருத்தொண்டர் அந்தாதியுமே தனக்கு முன் நூல்கள் என்றும் : வெளியாக்கி, அவைகளில் குறித்தவைகளைத் தழுவி (வழாமல்) உரைப்பதாகவும் கூறுகிறது.

நம்பி ஆரூரர், திருத்தொண்டத் தொகையைத் திருவாரூர்ச் சிவக்கடவுள் உணர்த்தப்பாடினார் என்பதும் : நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் அந்தாதியை நாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் உணர்த்தப் பாடினார் என்பதும் ; சேக்கிழார், பெரிய புராணத்தைத் தில்லைக் கூத்துடைக் கடவுள் உணர்த்தப் பாடினார் என்பதும் சைவ உலகக் கொள்கைகள். ஆரூர்க் கடவுளும் நம்பி ஆரூரரும் நாயன்மாருள் ஒன்பதின் மருக்கே சாதிவகுத்தனர். நாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரும் நம்பியாண்டார் நம்பியும் இருபத்தொன்பதின் மருக்கே சாதிவகுத்தனர். சேக்கிழாரும் (பெரியபுராணம்) தில்லைக் கூத்துடைக் கடவுளும் ஐம்பதின் மருக்கே சாதி வகுத்தனர். ஆட்டுவித்த, ஆட்டுவிக்கப் பெற்ற இவ் அறுவர் பெரியாராலும் சாதி காணாதபடி எஞ்சிநின்ற நாயன்மார் பதின்மூவராவர்.

வடமொழியும் தென் தமிழும் நெருங்கி உறழ்ந்து பழகிய காலத்துப் பாடப்பெற்ற பெரிய புராணமானது வடமொழிச் சாதிப் பெயர்ச் சொற்களாகிய பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர என்னும் நான்கில் முதல் மூன்றையும் அறவே தன் பாட்டுகளிற் கொண்டிலது. ஆனால் நான்காவதாகிய 'சூத்திர' என்னும் பெயரை இருமுறை கொண்டுளது. இருமுறையுள் இளையான்குடிமாறர் வாழ்க்கையில் ஒரு முறை; வாயிலார் வாழ்க்கையில் மற்றோர் முறை. இவற்றுள்ளும், "நம்பு வாய்மையில் நீடு சூத்திர நற்குலம்" என்று இளையான்குடிமாறர் வாழ்க்கையில் கூறிய முறையும்; "தொன்மை நீடிய சூத்திர நற்குலம்" என்று வாயிலார் வாழ்க்கையில் கூறிய முறையும் ; சூத்திர குலத்துக்கு வாய்மையையும், தவத்தையும், நல் என்னும் அடைமொழியையும் சேர்த்து வடமொழி மிருதி நூல், மறைச் சிரசாகிய உபநிடதம் இவற்றுடன் பெரிய புராணம் முரணுகிறது. ஆதலின் இந்த இரண்டு இடங்களிலும் சேக்கிழார் சொல்லோ, அதற்குப் பதிலாகப் பிறர் சொல்லோ அமைந்தது என்பது அறிவுசால் பெரியர் நெறியுடன் காணற்குரியது.

குறுநில மன்னர், பெருநில வேந்தர், இருநிதிக் கிழவராகப் பெரிய புராணத்துட் காணப் பெறுவோரிற் பலரையும் வேளாண் தலைவரென்று கொள்ளற்கு, இற்றைக்கு ஆயிரம் ஆட்டைக்கு முன் எழுந்த கார்மண்

டல சதகப்படி கருதல் அளவை இடந் தருகிறது.

நல் நிலையராகிய தவத்தினர் பல குடிப் பிறப்புள்ளும் காணப் பெறுகின்றாராதலின் திருத்தொண்டர் அந்தாதியில் இயற்பகை நாயனாரைக் குறித்த பாட்டில் "தவனாய்" என்ற சொல்லை "வேதியராய" என்று பெரிய புராணம் கூறுவதும், அந்தாதியில் இளையான்குடி மாறரைக் குறித்த பாட்டில் "மாதவன்" என்ற சொல்லை "நற்றவத்தவர்" என்று பெரிய புராணம் கூறுவதும் அறிஞர் உற்று நோக்கத் தகுந்தன. ஒருவாறு இளையான் குடிக்கு வந்த மாதவர், சூத்திரர் மனையில் உண்ண வந்தாராதலின், அவருக்கு நாற்குலத்தில் ஒரு குலப் பெயரையேனும் பெரிய புராணம் நாட்டியிலது போலும்! சூத்திரர் மனைக்குக் கடவுளே உண்ண வந்தார் என்னில், இக்காலக் கோயிற் கடவுள்முன் வைத்து எடுக்கும் உணவைச் சூத்திரர் ஆக்கவுந் தகுதியுண்டன்றோ?

'சதுர்வேத தரோ விப்ரோ சிவ சமஸ்கார வர்ஜித சண்டாளம் பாண்டம் ஆஸ்ரத்தியயதா கங்கா ஜலம்' என்றும், "சிவதீக்ஷா ஹீநே சிவத்ரோகி" என்றும் உள்ள சிவாகம விதிகளானவை சிவ தீக்கை பெறாதவன் சிவத்துரோகி என்றும் அவன் வேதங்களை எல்லாம் கரைகண்ட உயர்ந்தவனாக இருந்தாலும் அவன் சண்டாளன் என்றும் அவன் கைப்பட்டவை சண்டாளன் கைப்பட்டவை என்றும் கூறுகின்றன. நமது கோயில்களிலோ இக்காலம் அமுது ஆக்குவோர் சிவதீக்கையில்லாதவரே. சண்டாளர்க்குச் சூத்திரர் தாழ்வு எனக்கூறும் நூல் வடமொழியிலும் தென் மொழியிலும் இலது என்பது துணிபே.

### உணவு

1. இளையான் குடிமாறராகிய சூத்திரர்பால் கடவுள் உண்ணவந்தாராம்.

2. ஞானசம்பந்தர்வாழ்வு 462-வது பாட்டில் நீல நக்கர் மனையில் சம்பந்தரும் நீலகண்ட யாழ்ப்பாணரும் வந்த பொழுது "நீலநக்கர் மனையில் எழுந்தருளி, ஆற்றுவிருந்து எதிர் அமைப்ப அன்பருடன் இன்புற்று அங்கு அமுது செய்தார்" என்றும் 463-வது பாட்டில்,

> "நீடுதிரு நீலநக்கர் நெடுமனையில்
> விருந் தமுது செய்து நேர்மை
> பாடு மியாழ்ப் பெரும் பாணருந்
> தங்க அங்கிரவு பள்ளி மேவ"

என்றும், கூறிய பெரிய புராணம் நீல நக்கர் வாழ்வுகுறித்த 29, 30, 31-வது செய்யுள்களில் 'சீல மெய்த் திருத்தொண்டரோடுஅமுதுசெய்து அருளி' என்றும்,

> "நின்ற அன்பரை
> நீலகண்டப் பெரும் பாணர்க்கு
> இன்று தங்க ஓர் இடம்
> கொடுத்து அருளுவீர் என்ன
> நன்றும் இன்புற்று நடுமனை
> வேதியின் பாங்கர்ச்
> சென்று மற்றவர்க்கு இடம்
> கொடுத்தனர் திரு மறையோர்"

என்றும்,

> "ஆங்கு வேதியில் அறாத
> செந்தீ வலம் சுழிவுற்று
> ஓங்கி முன்னையில் ஒரு
> படித்தா யன்றி ஒளிரத்
> தாங்கும் நூலவர் மகிழ்வுறச்
> சகோட யாழ்த் தலைவர்
> பாங்கு பாணி யாருடன்
> அருளாற் பள்ளி கொண்டார்."

என்றும் தொடுத்து, ஞானசம்பந்தரும் நீலகண்டப் பாணரும் நீல நக்கரும்



ஒருங்கு இருந்து உண்டார் என்பதையும் முத்தீயை நீலநக்கர் வளர்த்து வந்த தூய நடுமனை இடத்தில் பாணர் மதங்க சூளாமணியாருடன் பள்ளி கொண்டார் என்பதையும் இவர்களுடன் துயில நீலநக்கர் உடன்பட்ட காரணத்தால் செந்தீ வடிவச் சிவக் கடவுள் உயர்மகிழ்வுற்றார் என்பதையும் வெளியாக்குகிறது.

3. திங்களூரில் அப்பூதியார் நாவரசரைக்கண்டதும் பெருவிருந்துசெய்த முறையை, அப்பூதியார் வாழ்வு 41 வது செய்யுளில்,

> "மைந்தரும் மறையோர் தாமும்
> மருங் கிருந்து அமுது செய்யச்
> சிந்தை மிக் கில்ல மாதர்
> திருவமு தெடுத்து நல்கக்
> கொந்தவிழ் கொன்றை வேணிக்
> கூத்தனார் அடியா ரோடும்
> அந்தமிழ் ஆளியார் ஆங்கு
> அமுது செய் தருளினாரே"

என்றும், சம்பந்தர் வாழ்வு 273-வது செய்யுளில்,

> "அணையும் திருத்தொண்டர் தம்மோ
> டாண்ட அரசுக்கும் அன்பால்
> இணையில் திரு அமு தாக்கி
> இன்பால் அமுது செய்வித்துப்
> புணரும் பெருகு அன்பும் நண்பும்
> பொங்கிய காதலின் கும்பிட்டு"

என்றும், முழங்குகிற பெரிய புராணம், அப்பூதியாரும் சம்பந்தரும் அப்பரோடும் மற்றும் அடியவர்களோடும் உடன் இருந்து உண்டார்களென்றும், வேளாள அப்பரை அந்தணச் சம்பந்தரும், அந்தண அப்பூதியாரும் வணங்கினர் என்றும் முழங்குகிறது. வேளாளக் கோட் புலியார் வீட்டில் ஆதிசைவச் சுந்தரர் உண்டனராக ஏயர்கோன் 37-வது செய்யுள் கூறுகிறது.

### வணக்கம்

இவ்வாறு குறிப்பதுடன், திருநாளைப் போவாரை (பறையரை)த் தில்லையந்தணரும், சம்பந்தரை, நீலநக்கரை அப்பரும்: நீலகண்டப் பாணரைச் சம்பந்தரும் வணங்கிய தன்மையைக் கூறிய பெரிய புராணம் அடியவர் போல் தோன்றிய ஏகாலியரைச் சேரமான் பெருமாள் படியுற வ்ணங்கிய பரிசும் கூறுகிறது.

### கோயில் புகல்

அந்தணச் சம்பந்தருடன் சேர்ந்தும், கோயில்களுள் தனித்தும், சாதியற்ற குலச்சிறையாரும், பாணரும், சாதித்திமிர் கொண்டவர் இக்காலம் போய் வருகிற இடங்களுக்கெல்லாமும் போய் வணங்கினார் என்பதையும் காரிக்கோவை பாடியவரும் சாதியற்றவருமாகிய காரி நாயனார், கோயில்கள் கட்டி உள் இடம் எவையும் போனார் என்பதையும், தயில வினைஞராகிய கலைய நாயனார் (இக்காலம் திருச்செந்தூரில் கோயிலிற் புகாதபடி தடுக்கப்பட்ட தயில வினைஞர் மரபினர்) திருக்கோயில் உள்ளும் புறம்பும் பல விளக்கு ஏற்றினார்என்பதையும் பெரிய புராணம் விளக்குகிறது. திருவாரூர்க் கோயில் வாயில் நின்று நீலகண்ட யாழ்ப்பாணர் பாடிய பொழுது பக்கம் வந்து பாடும்படி வடபுறம் வாயில் வகுப்ப, அதன் வழிப்புக்குக் கடவுள் குறியை நெருங்கி நின்று அவர் வணங்கினதாகத் திருநீலகண்டர் வாழ்வு யாழ்ப்பாணர் எட்டாவது செய்யுள் கூறுகிறது.

### சாதிப் பெயர்

பெரிய புராணம் பாடிய காலத்து உயர்தரப் பட்டமாக இருந்த தொண்

187156.

டைமான் என்பது சேக்கிழார் தம்பி பாலறு வாயர்க்கும், இக்காலம் புதுக் கோட்டை மன்னருக்கும் சுண்ணவினைஞர், சுண்ணம் விற்போருக்கும் பொதுவாயிற்று. பாண்டியர் பெயரோ, மறவர்க்கும், நாயக்கருக்கும் பாண்டி நாட்டுக் குறு மன்னவர்க்கும் உரித்தாயிற்று. 'கோன்' பெயரோ அப்பர், சுந்தரர், சம்பந்தர், கலிக்காமர், ஐயடிகள் இவர்களுக்கும் காடவ மன்னருக்கும், பொதுவர்க்கும் இணங்குகிறது. தேவர் பெயரோ, கடவுளருக்கும், அருள் நிலைத் தலைவர்க்கும், மறவர்க்கும் இசைந்து நிற்கிறது. 'ஐயர்' என்ற பெயரோ, தில்லை யந்தணரால் திருநாளைப் போவார்க்கும் (திருநாளைப் போவார் 30), ஞான சம்பந்தரால் நீலகண்டப் பாணருக்கும் (ஞான 133-176), இக்காலம் பார்ப்பனரில் ஒரு பிரிவினர்க்கும், கிறித்துமதப் போதகர்க்கும் பறையர் வீட்டில் தந்தைகட்கும் வழங்குவதாயிற்று. திருநெல்வேலிச் சீர்மைத் திருப்புடை மருதூர்ச் செப்புப் பட்டயத்தில் மறவரும், பிள்ளையும் முதலியும் ஐயராயினர்.

### மணம்

வேளாளக் கோட்புலி நாயனர் தம் மகள் வனப்பகை சிங்கடியார் இருவரையும் ஆதி சைவச் சுந்தரமூர்த்தியாரை மணக்கும்படி விரும்பினர் என்றும் சிவநேசச் செட்டியார் தம்மகள் பூம் பாவையாரை, மறைக்குற ஞான சம்பந்தர் மணக்கும்படி வைத்திருந்தார் என்றும் பெரிய புராணம் முழங்குகிறது. அருள் நிலையும் பெருவளனும் கொண்ட கோட்புலியாரும், சிவநேசரும் அடாதன செய்திரார். ஆதலால் அக்கால (பெரிய புராண நாயன்மார் வாழ்க்கைக் கால) வழக்கில் குலங் குறியாது, குணமும் நலனும் குறித்தே, மணம் நிகழ்ந்தது என்பது திண்ணம். அது பற்றி யன்றே அப்பரின் ஆசிரிய அக்காளை மகட் கொடை வேண்டிக் கலிப் பகையார் அனுப்பிய அறிஞரிடம் புகழனர் "குணம் பேசிக் குலம் பேசினர்" என அப்பர் வாழ்வு 24-வது செய்யுள் தெளிவிக்கிறது. மேலும் வணிகக் குலச்சங்கிலி யாரையும், உருத்திர கணிகைக் (கோயில் தாசிக்) குலப் பரவையாரையும், ஆதி சைவச் சுந்தரர் மணந்ததும், அவர் ஆக்கிய அடிசில் உண்டதும், பேரரசராகிய சேரமான் பெருமாளும் பரவையார் வீட்டில் உண்டதும் பெரிய புராணம் பேசிய நிகழ்ச்சிகளாம்.

### தொழில்

வில்வாள் கற்பிக்கும் தகுதியை இதிகாசங்கள் மறையவர்க்குஉரித்தாக்கவும் பெரிய புராணம் ஏனதிநாயனர் வாழ்வு 27-ம் செய்யுளில்,

" தான்ஆள் விருத்திகெடத்
    தங்கள்குலத் தாயத்தின்
ஆனதசெய் தொழிலாம்
    ஆசிரியத் தொன்மைவளம்
மேல்நாளும் தான்குறைந்து
    மற்றவர்க்கே மேம்படலால்
ஏனதிநாதர் திறத்து
    ஏலாஇகல் புரிந்தான் "

என்று சான்றோர்க்கு உரித்தாக்குகின்றது.

இவ்வாறிருப்பவும், சான்றோர் குலத்தை 'ஈழக் குலம்' என்பதாகச் சேக்கிழார் பாடினர் என்பதுவும் அறிஞர் ஆராய்ச்சிக் குரியதுவே. ஒருவழி 'ஈழ'ச் சொல் யாழ்ப்பாணத்தையோ பொன்னையோ குறிக்கும் என்பசர் போலும்.



உணவிலும், மணத்திலும், உடன் உறைவதிலும், வணக்கத்திலும், கோயில் புகுவதிலும், தொழில் முறையிலும், குலப் பெயரிலும் மக்களுள் வேற்றுமை காட்டாத பெரிய புராணத்தைப் போற்றும் சைவர்களே! உங்கள் குடிப் பிறப்பு, "மழவிடையார்க்கு வழி வழி ஆளாய் மணஞ் செய் குடி"ப் பிறப்பு அன்றோ ? உங்கள் பெண்மணிகள், சிவக் கடவுளே ! உன் அடியவராகிய " அன்னவரே எங்கணவ ராவார், அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம் " என்றும், " என் கொங்கை நின் அன்பரல்லாதார் தோள் சேரற்க, என்கை உனக்கல்லாது எப் பணியும் செய்யற்க" என்றும் கூறிச் செய்து வந்த சிவ மணிகள் அல்லரோ? உங்களது ஆண் இளஞ் சிங்கங்கள் உங்கள் பெண்மணிகட் கேற்ற முறையில் அமைந்தவர்க ளல்லரோ? உங்கள் திருமுறை ஆணை,

" விண்டு மனத்தவர் போமின்கள்
    மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
  கொண்டும் கொடுத்தும் குடி குடி
    ஈசர்க்கு ஆட்செய் மின் "

என்பதன்றோ ? உங்கள் அருள் மணிவாக்கு, 'நள்ளேன் நினதடியாரோடு அல்லால்' என்பதன்றோ ? உங்கள் அறிவு நூல் பழகச் சொல்வது, இழிபுறச் சமயக் கொள்கையாகிய பிறுதி வழி உழலாமை யன்றோ ? ஆதலால் அண்டங் கடந்த பொருள், அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள், பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளாகிய சிவக் கடவுளைப் போற்றிச் செந்நெறி ஒழுகிப் பிறரையுஞ் சேரவாரும் ஜெகத்தீரே என்றும் 'நற்றுங்கதி அடைவோம் என்னில் கெடுவீர் ஓடிவம்மின்' என்றும் 'சாதி குலம் பிறப்பு' என்னுந் தடஞ்சுழியில் தடுமாறுதீர் என்றும் உம்முடன் சேர்த்து உய்வீராக.

ஓம் சிவம்

" என்றும் இன்பம் பெருகும் இயல்பினல்
  ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
  மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
  நின்ற தெங்கும் நிலவி உலகெலாம் "

"லோகோபகாரி."

---

## சமரசவேத சன்மார்க்க சபை

### அலசூர், பெங்களூர்

நம் சமாஜத்தோடு இணைக்கப்பெற்ற இச்சபையின் 1930—31-வது ஆண்டு நிறைவிழா திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் 28-6-31 ஞாயிற்றுக்கிழமை மாலை அலசூர் ஆற்காடு நாராயணசாமி முதலியார் ஸ்கூலில் நடைபெற்றது. திரு. கி. குப்புச்சாமி முதலியார் "சமரசம்" என்பதுபற்றிப் பேசினர்கள். அறிக்கைப்பத்திரம் படிக்கப்பட்டது. இச்சபையின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமைதோறும் மதுரகவி நடராஜ உபாத்தியாயரவர்கள் பெரியபுராணப் பிரசங்கம் செய்துவருகிறார்கள்.

# அறிவோடு இயைந்த உணர்வின் தோற்றம்

## (The Evolution of Sense and Sensibility)

[தொகுத்தது - தி. கு. கி. நாராயணசாமி]

[பிரசோற்பத்தி, வைகாசி, கரு (29-5-31) வெள்ளி மாலை சைவ சித்தாந்த மகா சமாஜ ஆதரவில், சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகானந்த நிலைய'த்தில் உயர் திரு.பா.வே. மாணிக்க நாயக்கர் அவர்கள், அறநிலையப் பாதுகாப்புக்கழகக் காரியாளர், திருவாளர் C. S. சுவாமிநாத முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவு.]

**தலைவர் அவர்களே! அன்பர்களே!**

சென்ற ஞாயிறு ஆலந்தூரில் பேசிய 'செயற்கை அறம்' என்னும் சொற்பெருக்கின் தொடர்ச்சியே இன்றைய பொருளாகும். அங்கு 'செயற்கை அறம்' என்ற தலைப்புத் தந்த பெரியார் இங்கு அவைத் தலைவராகத் தங்கியுள்ளார். இயற்கையில் இயற்கை அறம் உண்டெனில், செயற்கை அறமும் இயற்கையில் இருத்தல் வேண்டும். ஆதலால் அதுபற்றிப் பேசினேன். நான், இயற்கை அறத்திற்கு செயற்கை அறமென்றும், அஹிம்சைக்கு ஹிம்சையென்றும் (இது ஞானியார் சுவாமிகள் சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் 'அஹிம்சை' பற்றிப் பேச, நாயக்கர் ஹிம்சை குறித்து பேசியது) கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும் (பல்லாவரம் பொதுநிலைக்கழக விழாவில் நிகழ்த்தியது) என்று பேசுவதால் டா என்றால் டு என்கிறவன் (oppositionst) என்று கூறுகிறார்கள். எவற்றையும் ஒரோவழி ஆயாது, உடன்பாடு எதிர்மறையான வழிகளில் ஆய்ந்தால் அல்லது, நடுவாம் தன்மையினர் நயந்திடும் சிறந்த முடிவு காண முடியாது. நம்மவர் இவ்வழியை வழக்கில் இதுகாலை கொள்ளும் பழக்கமில்லாததினால் எனது மொழிகளைச் சண்டைக்காரன் பேச்சென்கிறார்கள்.

நிற்க, தலைவர் இயற்கை அறத்தை விரித்துப்பேசும் அறத்தைவிட்டு விட்டதினால் யானும் செயற்கை அறத்தை விரித்துப் பேச இடம் பெறவில்லை. ஆலந்தூர் வாராதவர்கள் இவண் பலர் இருப்பதால் அச்சொற்பொழிவினை சுருங்கச் சொல்லி மேற் செல்கிறேன். பறவைகட்குத் தொலைவிலிருந்து பார்க்கக் கண்கள் இயற்கையிலுண்டு. கருட பார்வை என்பதும் அதுபற்றியாகும். மெல்லிய தொலை வோசைகளைக் கேட்கும் ஆற்றல் காதுகளில் இயற்கையிலிருக்கிறது. எலிக்காதென்பது ஈண்டு கவனிக்கத் தகுந்தது. விலங்கினம் வெம்மை தண்மைதாங்கத்தக்க உரோமம் உடையது. கடினதரையில் நடந்தால் கால்தேயாதவாறு காக்கக்கொளம்புவுண்டு. பகைவர் தாக்கினால் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள கொம்புகள் உண்டு. இன்ன பிறவும் இயற்கையில் அவைகள் வாய்க்கப்பெற்றன. மக்கள் இவற்றை இயற்கையில் பெறவில்லையென்பது வெள்ளிடைமலை. ஆதலால் இவற்றை நிவர்த்திக்கக் கருதி பார்வைக்குக் கண்ணாடி (spectacles) செவிக்கு ஒலிக்கருவி (Ear-Trumpet) வெம்மை தண்மைக்குத் தகுந்த உடைகள், கால்களுக்குச் செருப்பு, தற்காப்புக்கு ஆயுதங்கள் (Arms) இன்ன பிற செயற்கையில் செய்து கொள்கிறார்கள். ஈண்டுக் காட்டிய வசதிகளை மக்கள் இயற்கையில் வாய்க்கப் பெறாததினால் செயற்கைக்குப் போகிறார்கள். இதனால் மக்கள்மாக்களினும் இவ்வசதிகளை நோக்கத் தாழ்ந்த நிலையிலிருக்கிறார்கள். இதுவே அற்றை நாள் சொற்பொழிவின் பொழிப்பாகும்.



இன்று கூறப்போந்துள்ள பொருள் எனது உயர்நிலைப் பள்ளியில் எழுதிய கட்டுரையாகும். தமிழ் ஆசிரியர் மொழி வளர்ச்சி கருதி வாரமிருமுறை தாய் மொழியில் கட்டுரை எழுதுவித்தார்கள். அக்கட்டுரைகளில் 'கடவுளைப்பற்றி உனக்கென்ன தெரியும்.' (What do you know of God ?) என்பதுஒன்று. அதன் வாக்கியங்களை இவண் விரித்துப் பேச எண்ணியுள்ளேன்.

கட்டுரையின் முதல் வரி 'கடவுளை எனக்கு நன்றாகத் தெரியும்' என்பது. இதற்குப் பருமையில் (concrete) எடுத்துக் காட்டப் பின் வரியில் கடவுளுக்குப் பிறப்பு உறுப்பு(organ)இல்லை என்று எழுதினேன். ஏன் எனின் புழுவுக்கு பிறப்பு உறுப்பு உடலின் அளவை நோக்கப் பெரிது. புள்-மாக்கள்-மக்கள் இவற்றிற்கு உடலின் அளவை நோக்கப் படிப்படியாய்பிறப்பு உறுப்பின் அளவு குறைந்திருக்கிறது. அதாவதுபுழுவின் உடல் பிறப்பு உறுப்பு அளவுகட்கு ஏற்படும் பின்னம் (Factor) புள்ளின் உடல், பிறப்பு உறுப்பு அளவுகட்கு ஏற்படும் பின்னத்தைவிடப் பெரிது. அம்முறையே புழு-புள்-மாக்கள்-மக்கள் இவ்வகுப்புத்தொகுதிகட்குப்பால் உறுப்பின் அளவு, உடல் அளவை நோக்கப் படிப்படியாய்க் குறைந்து வருகிறது. (descending order) பின்னத்தைப் பண்டை நாளில் கீழ்வாய் இலக்கம் என்பர். இதுவழக்கொழிந்து (out of use) இருக்கிறது. கூர்தல் (evolution) முறையில் பிறப்பு உறுப்பு இல்லாதது ஒன்று இருத்தல் வேண்டும். அதுவே கடவுள். பிறகு கடவுளுக்குக்கைகால்கள் இல்லைஎன்று எழுதினேன். காரணம் உலகில் வாழ்வனவற்றை வகுத்துள்ள பாகுபாட்டால் நன்கு அறியலாம். (Milliped centiped - Quadruped - biped) புழுவுக்குக் கால்கள் எண்ணிறந்தன. மாக்களுக்கு நான்கும் மக்களுக்கு இரண்டுமாகக் குறைந்துவருதலின் கூர்தல் முறையில் கைகால்கள் இல்லாத தொன்று கடவுளாகும். எறும்பு பிறவற்றிற்குக் கண்கள் மலிந்து திரண்டு இருப்பதைப்பெரிதாக்கிக்காட்டும்கண்ணாடியால் (Microscope) நுண் அறிவாளர் கண்டு கணக்கெடுத்துக் காட்டியுள்ளார்கள். கூர்தல் முறையில் கண், வாய், மூக்கு, செவி, வயிறு இல்லாதது கடவுள் என்றேன். இவை என் சோதனைச் சாலையில் (Laboratory) சோதித்துக்கண்ட உண்மைகளை வைத்து எழுதினேன். இதுவரை எதிர்மறையில் கூறியதால் உடன்பாடாக எழுதக்கருதி கடவுளுக்கு மூளையுண்டு என்று எழுதினேன். புழு-புள்-மாக்கள் மக்கள் இவ்வகுப்புகட்கு முறையே உடல் அளவை நோக்க மூளையின் அளவு பெருகி வருகிறது. கூர்தல் முறையில் உடல் சுன்னமாகவும் (zero) மூளையே உருவாகவும் உடையதைக் கடவுள் என்றேன். அம்மூளை ஊனக்கண்ணால் அளவிடற்பாலதன்று. (infinity) மூளை மிக மிகப் பெரிதாதலால் கடவுள் அறிவு மயமாக இருக்

கிறார். புழு-புள்-மாக்கள்-மக்கள் தொகுதியின் மூளை உறுப்பின் கடினம் மெலிந்து வருகிறது. கடவுள் மூளை சிதாகாசம் போன்று (Ether) மெல்லியதாயிருக்கும் என்பது கூர்தல் முறையில் கிடைப்பது. பின்னும் கடவுள் நினைத்த மாத்திரையில் ஐந்தொழிலையும் (படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல்) செய்கிறார் என்று எழுதினேன். காரணம் புழு-புள்-மாக்கள் - மக்கள்-தொகுதியின் புணர்ச்சியின் நேரம் முறையே குறைந்து வருகிறது. கூர்தல் முறையில் நொடிப்பொழுதிலும், மிக மிகச் சிறுபொழுதில் அதாவது நினைத்த மாத்திரையில் ஐந்தொழிலையும் செய்யவல்லவன் கடவுளாகும். இவ்வளவோடு என் பெருக்கை முடித்துக்கொண்டு பின் பகுதியை என் உடல் நலன் உரம் பெற்றதும் பேசுகிறேன்.

---

# திருமுறைப் பெருமை

ஆரியவேதங்கள் இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என நான்கு. தமிழ்மறைகளும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருமறை, திருநாவுக்கரசு சுவாமிகள் திருமறை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமறை, மாணிக்கவாசக சுவாமிகள் திருமறை யென நான்கு.

ஆரியவேதங்கட்கு பிருகதி அநுட்டுப் முதலிய சந்தசுகள் இருத்தல் போலத் தமிழ்வேதங்கட்கும் நட்டபாடை தக்கராகம் முதலிய பண்கள் இருத்தல் காண்க. உதாத்தம் அநுதாத்தம் சுவரிதம் பிரச்சயங்களாய சுரங்கள்போலத் தமிழ் மறைக்கும் எடுத்தல் படுத்தல் நலிதல் மெலிதலாய நான்கு முண்டென்க.

## ஆரியவேத தமிழ்வேத ஒற்றுமை

ஆரியவேதம் முதலிற் சிவபெருமானால் அருளப்பட்டது. தமிழ்வேதம் அங்ஙனமே ஆதியிற் சிவபெருமானாற் செய்தருளப்பட்டதென்று சிவ ரகசியங் கூறுகின்றது.

ஆ:—சிவபெருமான் நான்கு திருமுகங்களினின்று தோற்றுவிக்கப்பட்டது.

த:—சிவபெருமானால் ஆசாரிய சுவாமிகள் நால்வர் திருமுகங்களினின்று தோற்றுவிக்கப்பட்டது.

ஆ:—சாகைகளையுடையது.

த:—திருப்பதிகங்களையுடையது.

ஆ:—கந்தசுவாமி, அதர்வ முனிவர், சுவேதாசுவதர முனிவர், பிரம்ம தேவர், சனற்குமாரர், யாஞ்ஞவற்கியர், வியாசர், பிரசாபதி, வருணன், ஆசுவலாயனர், அநுமார், தத்தாத்திரேயர் முதலிய பலரால் பின்னர்ச் சொல்லியருளப்பட்டது.

த:—திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், சேந்தனார், திருமாளிகைத்தேவர், புருடோத்தம நம்பி, கருவூர்த் தேவர் முதலாயினோராற் பின்னர்ச் சொல்லியருளப்பட்டது.

ஆ:—பலபடக் கிடந்து வியாத முனிவரால் வகுக்கப்பட்டது.

த:—பலபடக் கிடந்து நம்பியாண்டார் நம்பி என்னுஞ் சைவ முனிவரால் திருமுறையாக வகுக்கப்பட்டது.



ஆ:—பின்னர் பிரம்ம தேவரால் கூறப்பட்டது.

த:—பின்னர் பிள்ளையாராற் கூறப்பட்டது.

ஆ:—அநேக சாகைகள் இலதாயிற்று.

த:—அநேக திருப்பதிகங்கள் இலதாயிற்று.

ஆ:—காயத்திரி, அநுட்டுப், பிருகதி, பங்தி முதலாய சந்தசுகளுடன் ஓதப்படும்.

த:—நட்டபாடை, பழம்பஞ்சுரம், தக்கராகம், கொல்லி முதலாய பண்களுடன் ஓதப்படும்.

ஆ:—கனம் சடை பொருந்த அத்தியயனம் பண்ணப்படும்.

த:—சுத்தாங்கம் கீதாங்கம் இவை பொருந்த பாராயணஞ் செய்யப்படும்.

ஆ:—சனாதனர், அகத்தியர், சத்திவசா என்பவர் புத்திரர் இராதிதரா முனிவர், பூருசிட்ட முனி குமாரர் தபோநித்யர், மௌற்கல்யர் புத்திரர் நாகர் முதலாயினோர் விதக்கப்பட்டனர்.

த:—அப்பூதியடிகளாயனார், திருநீலநக்க நாயனார், சிறுத்தொண்ட நாயனார், சண்டேசுர நாயனார், மார்க்கண்டேயனார், கோச்செங்கட் சோழ நாயனார் முதலாயினோர் விதக்கப்பட்டனர்.

ஆ:—யாக்ஞவற்கியரது மனைவியாரான மைத்திரேயீ கார்க்கி முதலிய நங்கையர் பேசப்பட்டார்கள்.

த:—காரைக்காலம்மையார் மங்கையர்க்கரசியார் முதலிய நங்கையர் வியக்கப்பெற்றனர்.

ஆ:—மைத்திரேயீ என்னும் மாதரசிக்கு மைத்திரேயீ திரோவாச என்னும் முதலையுடைய வடமொழிச் சுலோகத்தால் உபதேசிக்கப்பட்டது.

த:—'மானினேர்விழி மாதராய் வழு திக்கு மாபெருந் தேவிகேள்' என மங்கையர்க்கரசி யென்னும் நங்கையர் திலகத்திற்கு உபதேசிக்கப்பட்டது.

ஆ:—யமன் மனைவியாகிய ஜான்மலி என்பவளால் கடவல்லி என்னும் யசுர்வேத பாகம் உபதேசிக்கப்பட்டது.

த:—பரமதத்தன் மனைவியாராய் சிவபெருமானால் 'அம்மையே'யென்று அழைக்கப்பட்ட காரைக்காலம்மையாரால் மூத்த திருப்பதிகம் (தேவாரம்) பாடப்பட்டது.

ஆ:—அவிமுக்தம், திருக்கைலாயம், திருக்கேதாரம், சிதம்பரம், திருவாரூர் முதலிய தலங்களைப் புகழ்ந்து கூறுகின்றது.

த:—அவையிற்றைப் புகழ்ந்து கூறுகின்றது.

ஆ:—சனகாதி நால்வர்க்கும் கல்லால் நீழற்கண் எழுந்தருளியிருந்து சிவதத்துவ ஞானம் உபதேசித்தருளியதை யசுர்வேதமாகிய தக்ஷிணாமூர்த்தியுபநிடதம் வியக்கின்றது.

த:—அதனை யாங்காங்கு வியந்து போற்றுகின்றது.

ஆ:—திருநீற்றின் மகிமை கூறுவது பஸ்மசாபால உபநிடதம்.

த:—திருநீற்றின் மகிமை கூறுவது திருநீற்றுப்பதிகம்.

ஆ:—விநாயகக் கடவுள் வீரபத்திரக் கடவுள் தக்கயாக சங்காரம் சுப்பிரமண்யக் கடவுள் என்னுமிவரை வியந்து துதிக்கின்றது.

த :—அவர்களை ஆங்காங்குப் போற்றுகின்றது.

ஆ :—தேவியாகிய பரமேச்சுரையைப் பல இடங்களில் பேசும்.

த :—அவ்வாறு கூறும்.

ஆ :—கோயிலாகிய சிதம்பரத்தையே விசேடமாய்ப் புகழ்வது.

த :—அங்ஙனே புகழ்வது.

ஆ :—ஆரிய முதனூல்.

த :—தமிழ் முதனூல்.

ஆ :—இறுதிக் கண் பாராயணப் பயன் கூறும்.

த :—திருப்பதிகமுடிவில் அப்பயன் கூறும்.

ஆ :—சிவாலய நித்திய நைமித்திகங்கள் சிவபூசை முதலியவற்றினைப் பெறும்.

த :—அவற்றினைப்பெறும்.

ஆ :—முத்தியை அமிர்தம் என்று கூறும்.

த :—அங்ஙனம் கூறும்.

ஆ :—முத்திப்பதத்தைச் சுவர்க்கம், நாகலோகம், சோமலோகம் என்றுரைக்கும்.

த :—முத்தியை விண்ணுலகம் உம்பர்பதி வீடு வான் சிவலோகம் என்று கூறும்.

ஆ :—தடத்த சொரூப இலக்கணங்கள் கூறப்படும்.

த :—இருவகை இலக்கணமு மியம்பப்படும்.

ஆ :—தாபத்திரயங்களை அடக்கும் பஞ்ச சாந்தி கூறும்.

த :—எவ்வகைத் துன்பங்களையும் போக்கும் கோளறு பதிகங் கூறும்.

ஆ :—உபநிடதச் சாகைத்தொகை கூறும்.

த :—திருப்பதிகத் தொகையுரைக்கும்.

ஆ :—ஓம் நமோ பகவதேருத்ராய ! ஓம் நமஸ்த்தேருத்ரமந்யவ ! எனவரூஉம் உருத்திரநமகமுள்ளது.

த :—‘வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி ! மீளாமே யாளென்னைக் கொண்டாய் போற்றி’ என இங்ஙனம் போற்றித் திருத்தாண்டகம், போற்றித் திருவிருத்தம், போற்றித் திருவகவல் உள்ளன.

ஆ :—பஞ்சாக்ஷரம், உருத்திராக்கம், யோகம், பஞ்சப்பிரமம், ஷடங்கம் என்னுமிவை நரசிங்கதாபினி, உருத்திராக்க சாபாலம், தரிசனம், பஞ்சப்பிரமம், காலாக்கினிருத்திரம், பஸ்மசாபாலம் என்னுமிவை முதலிய உபநிடதங்களி னுணர்த்தப்படும்.

த :—இவை பஞ்சாக்கரப் பதிகம், நமச்சிவாயப் பதிகம், திருநேரிசை, திருநீற்றுப் பதிகம் முதலியவற்றில் நன்கு உணர்த்தப்படும்.

இன்னன பல பொருள்களொத்தலானே, இரு வேதங்கட்கும் பேதங் காண்கிலேம். ஆரியவேதமே தமிழ் வேதம்; தமிழ்வேதமே ஆரியவேதம் என்க.

## ஆரியவேத தமிழ்வேத தாரதம்மியம்

ஆரியவேதம், பரப் பிரமமாகிய பரமசிவனாலே அருளப்பட்டது.

**தமிழ்வேதம்** :—அப் பரமசிவனைத் தம்முளடக்கிய பெரியோர்களால் திருவாய்மலர்ந்தருளப்பெற்றது.

ஆ :—பலபடக் கிடந்ததனை நான்காக வகுத்தவர் காசித்திருப்பதியின் மயக்கமுற்றவராகிய வியாத முனிவர்.

த :—பலபடக் கிடந்ததனைத் திருமுறையாக வகுத்தவர் திருநாரையூர்த் திருப்பதியில் ஞான விளக்கமுற்ற ஆதிசைவ முனிகளாகிய நம்பியாண்டார் நம்பிகள்.

ஆ :—சிவபிரானால் எழுதப் படாதது.

த :—அவ்வரிய வேதம் அருளிய திருச்சிற்றம்பலமுடையார் அருமைத் திருக்கரங்களினாலே எழுதப்பட்டது.

ஆ :—வேதாரணியத்திலே கதவை மூடிச் சிவலிங்கத்தை நேரே தரிசிக்கவொட்டாமற் செய்தது.

த :—பூட்டிய கதவைத் திறந்து அதனைத் தரிசிக்கச் செய்தது.

ஆ :—இந்திரன், சந்திரன், அன்னமயம், பிராணமயம், விஞ்ஞானமயம், பிரமன், விட்டுணு முதலிய பெயர்களானும் பிரமத்தைப் போற்றுவது.

த :—அங்ஙன மின்றிச் சிவபெருமானுக்கே சிறப்பாயுள்ள திருநாமங்களை எடுத்துப் போற்றுவது.

ஆ :—யசுர்வேதத்துட் சுக்கில யசுர்வேதம் ஓதுவோரை மத்தியானத்திற் சண்டாளத்துவம் உடையவராகச்செய்வது.

த :—எதை எப்பொழுது ஓதினும் சண்டாளத்துவம் நீங்கச் செய்வது.

ஆ :—வாரணாசி, சிதம்பரம், பிரயாகை, திருவாரூர், சீர்காழி முதலிய சில தலங்களைப் புகழ்வது.

த :—அவை முதலாகிய அநேக தலங்களைப் புகழ்வது.

ஆ :—உபநயனச் சடங்கு செய்த பின் ஓதப்பெறுவது.

த :—அச்சடங்கின்றி சமயதீக்கை விசேட தீக்கை முதலியன பெற்றோர்களால் ஓதப்பெறுவது.

ஆ :—பல தேவர்களைப் புகழ்வது.

த :—அவர்களை யெல்லாம் பசுக்களென் றொதுக்கிவிட்டு சிவபெருமான் ஒருவரையே பதியென்று புகழ்வது.

ஆ :—யசுர்வேத தைத்ரிய முதற் சாகை வருணன் தன் குமாரன் பிருகுவுக்கு உரைக்கப்பெற்றது.

த :—தோடுடைய என்னும் முதற் குறிப்பையுடைய முதற்றிருச்சாகை பிள்ளையார் தம் பிதாவுக்கு உரைக்கப் பெற்றது.

ஆ :—காயத்திரி, அநுட்டுப், திருட்டுப், பங்தி, உட்டிணிக் முதலாய ஏழு சந்தசுகளை யுடையது.

த :—நட்டபாடை, தக்கராகம், கொல்லி, தக்கேசி, குறிஞ்சி, பழந்தக்கராகம், மேகராகக்குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, இந்தளம், சீகாமரம், நட்டராகம், பியந்தைக்காந்தாரம், செவ்வழி முதலிய முக்கிய இருபத்தொரு சந்தசுகளை உடையது.

ஆ :—அத்தியயன மாத்திரமுடையது.

த :—அதனுடனே நித்திய பூசை நைமித்தியமாகிய மகோற்சவம் என்னுமிவற்றையுமுடையது.

ஆ :—பல சமயிகளுக்கும் பதிப்பொருளை நிச்சயிக்கவொட்டாது மயக்கஞ் செய்வது.

த :—பதிப்பொருள்சிவபெருமானேயென்று நன்கு விளக்குவது.

ஆ :—ஓதுவார் விழிநீர் பெருக்கி நெஞ்சு நெக்குருகி நிற்கச்செய்யாதது.

த :—ஓதுவார் ' கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள், தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாய, மெய்ம் மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி, யன்பராகச் செய்வது.'

ஆ :—விட்டுணு பிரமன் சூரியன் அக்கினி என்னுமிவர்கட்கும் ஆதிக் கம் கூறும் உபப்பிருங்கணங்களையுடை யது.

த :—பரம்பொருளாகிய சிவபெரு மானைத் தம்முளடக்கிய சிவனடியார் களுக்கே ஆதிக்கமுரைக்கு முபப்பி ருங்கணத்தை யுடையது.

ஆ :—பதினெட்டுப் புராணங்களா கிய உபப்பிருங்கணங்களை யுடையது.

த :—அறுபத்துமூவராந் தனியடி யார் புராணங்கள் அறுபத்துமூன்றும், தொகை யடியார் புராணங்கள் ஒன் பதுமாகிய எழுபானிரண்டு புராணங்க ளாகிய உபப்பிருங்கணங்களை உடை யது.

ஆ :—உலகியல் வழக்கங் கூறும் தனுர்வேதம், கந்தருவவேதம், அர்த்த வேதம், ஆயுர்வேதம் என்னும் உப வேதங்களை யுடையது.

த :—உலகியல் வழக்குடன் சரியை கிரியை யோக ஞானபத விலக்கணங் களையும் முத்தி நெறியையும் முன்னு றத் தெரிக்கும் திருவிசைப்பா, திருப் பல்லாண்டு, திருமந்திரம், பதினொராந் திருமுறை என்னும் உபவேதங்களை யுடையது.

ஆ :—கேட்டோர் ஆசுவலாயனர் சனற்குமாரர், புசுண்டர், பைப்பில தர், மைத்திரேயீ, சுவேதகேது அங் கிரசு, அசுவினி, தேவதைகள், தத்தி யங்முனி, பிருகு, யமன் முதலிட பசுக்கள்.

த :—இதனைக் கேட்டவர் பதிப் பொருளாகிய பரமசிவன் ஒருவரே.

ஆ :—தன்கணுள்ள மந்திரங்களைத் தேவர்கள் போர்முகத்தில் அத்திரங் களாகப் பிரயோகித்தபோது அசுரர் களாற் கவரப்பட்டது.

த :—தன்கணுள்ள திருப்பாசுர மந் திரத்தை முனைமுகத்தில் அத்திர மாகப் பிரயோகித்த காலைப் புத்தநந்தி தலையுருளவும், புத்தர்கள் கவாமுடி யாது வெருவி யோடவும் செய்தது.

ஆ :—அசுரர் கடனீருக்குட்கொண்டு செல்லவும், அதற்குள் அமைந்து இருந் தது.

த :—பிள்ளையார் வைகையாற்றில் விட எதிரேறி நீரைக் கிழித்துச்சென் றது.

ஆ :—கடற்குள் தான் தங்கிய இடத் திற்கு யாதோர் மகிமையும் உண்டாகப் பெற்றிலது.

த :—தான் யாண்டுச் சென்று தங் கிற்றோ ஆண்டுத் திருவேடகம் என் னும் திருத்தலமுண்டாகிச் சிவபெரு மான் சாந்நித்தியராயமர்ந்து இன்றும் அருள் புரியப்பெற்றது.

—“ சிவநேசன் ”

187156

# சமாஜ அறிக்கைகள்

1. மருதவரை நீழல் பிள்ளையார் நன்னெறிக் கழகமும், சேலம் செவ்வாய்ப்பேட்டை திருஞானசம்பந்தர் திருச்சபையும், பெங்களூர் சமரசவேத சன்மார்க்க சங்கமும் நம் சமாஜத்தோடு இணைக்கப் பெற்றுள்ளன.

2. பெங்களூர் ஸ்ரீ அன்னவஸந்தி சங்கம் நமது சமாஜத்தின் கூட்டாதரவில் திருவாளர்—கி. குப்புச்சாமி முதலியார் அவர்களைக்கொண்டு 1931ஞு ஜூன்மீ 23, 25, 26, 27, 28, 29-ம் தேதிகளில் முறையே திருக்குறள் கடவுள் வாழ்த்து, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால், திருவாசகம், சிவஞானபோதம் என்னும் பொருள்களைப்பற்றிய சொற்பொழிவுகள் செய்வித்ததை மிக மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம். பல ஆண்டுகளாக சைவ சித்தாந்திகள் தங்கள் ஊருக்குவந்து சித்தாந்த உண்மைகளை விளக்காமைக்கு வருந்தி இனியேனும் சித்தாந்த வல்லுனர்கள் அடிக்கடி பெங்களூரில் சமயப் பிரசாரம் செய்தல்வேண்டும் என்று அவ்வூர் வாசிகள் பலர் வேண்டிக் கொண்டனர்.

---

சைவ சித்தாந்த மகா சமாஜத்தில் விற்பனைக்குரிய

# புத்தகங்களின் அட்டவணை

| | ரூ. | அ. |
|---|---|---|
| "சித்தாந்தம்" பைண்டு பிரதி (மலர் க, உ, ந. தனித்தனி) | 2 | 0 |
| சம்பந்தர் தேவாரம் (கலிக்கோ) ... ... ... | 1 | 0 |
| அப்பர் தேவாரம் (கலிக்கோ) ... ... ... | 0 | 12 |
| ஷை (ராப்பர்) ... ... ... | 0 | 10 |
| சுந்தரர் தேவாரம் ராப்பர் ... ... ... | 0 | 4 |
| உமாபதிசிவம் திருமுறைத்திரட்டு ... ... ... | 0 | 2 |
| இயற்கைத் தத்துவ நூலும் சைவசமயமும் ... ... | 0 | 2 |
| புலால் மறுத்தலுக்கு 50 காரணங்கள் ... ... | 0 | 2 |
| அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திரவுண்மை ... | 0 | 4 |
| திருவெம்பாவைக் கருத்து ... ... ... | 0 | 2 |
| சைவமும் சுயமரியாதையும் ... ... ... | 0 | 2 |
| வேட்டுவனும் அப்புழு ... ... ... ... | 0 | 2 |
| திருவிழாவின் அர்த்தம் (பத்து பிரதிகள்) ... ... | 0 | 2 |
| அறுபத்துமூவர் விளக்கம் ... ஷை ... ... | 0 | 2 |
| மகிழடிசேவை விளக்கம் ... ஷை ... ... | 0 | 2 |
| தேவாரம் விளக்கம் ... ... ஷை ... ... | 0 | 2 |
| சமயகுரவர் சம்பாஷணை ... ஷை ... ... | 0 | 2 |

தபாற்கூலி, பார்சல் செலவு, ரிஜிஸ்தர் செலவு முதலியன வேறு.

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி., சென்னை, 10-7-1931.

இங்ஙனம்;
ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 7.

# ஏல விற்பனை அறிக்கை

சைவ சித்தாந்த மகா சமாஜத்தினரால் வெளியிடப்பட்ட சுந்தரர் தேவாரம் ராப்பர் பிரதிகள் 1800 வரையிலும், அப்பர் தேவாரம் ராப்பர் பிரதிகள் ஆயிரம் வரையிலும் ஆகிய இவைகள் சென்னை, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு 150-வது எண்ணுள்ள இல்லத்தில் 1931௵ ஜூலை௴ 26௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்குப் பகிரங்க ஏலத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகளின்படி சமாஜ நிர்வாக சபையினரால் விற்றுமுதல் செய்யப்படும்.

## நிபந்தனைகள்

1. நூறு பிரதிகள் ஒவ்வொரு கூறாக (each lot, one hundred copies) விற்கப்படும்.

2. ஏலத்தில் ஒரு கூறையோ, பல கூறுகளையோ எடுப்பவர்கள் ஏலம் முடிந்தவுடன் பாதிவிலையைச் சமாஜக் காரியதரிசியிடம் செலுத்திவிட வேண்டும். மற்றைய பாதியை ஏலம் முடிந்த மூன்றுநாளைக்குள் செலுத்திவிடவேண்டும். விலை முழுமையும் செலுத்தியவுடன் தாங்கள் ஏலங்கூறி யெடுத்த புத்தகக் கூறுகளை எடுத்துக்கொண்டு செல்லவேண்டும்.

3. மேற்கண்ட நிபந்தனையின்படி பணம்கட்டத் தவறினால், தவறியவர்களின் பொறுப்பில் சமாஜக் காரியதரிசியால் மறுஏலம் விடப்படும். மறு ஏலத்தில் முன் ஏலத்தைவிடக் குறைந்தவிலைக்குப் போனால் விலைக்குறைவு, ஏலச் செலவு முதலியவைகட்கு, தவறியவர் ஜவாப்தாரி யாவார்.

4. சமாஜக் காரியதரிசி முதலிய நிர்வாக சபையினரும், ஏனைய சமாஜ அங்கத்தினரும், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட எவரும் ஏலத்தில் விலைகூறவும் கூறுகளை எடுக்கவும் உரிமையுடையவர்களாவர்.

5. சென்னைமா நகரத்துக்குப் புறம்பேயுள்ள சமாஜ அங்கத்தினர் எவரேனும் தபால் மூலம் ஷை ஏலத்தில் கலந்துகொள்ள விரும்பினால் கீழ்வரும் முறையை அனுசரிக்கவேண்டும். தாங்கள் எடுக்க எண்ணுகின்ற கூறு எது, எந்த விலை வரையில் ஏலத்தில் கேட்கலாம் என்பவற்றையும், இதற்காக மட்டும் காரியதரிசிக்கு அதிகாரம் தருகிற செய்தியையும் ரிஜிஸ்தர் தபால் மூலம் காரியதரிசிக்கு ஜூன்௴ 30௳க்குள் தெரிவித்து ஏலம் எடுத்தவுடன் கட்டவேண்டியதற்காகப் பாதி தொகையையும் ஜூன்௴ 30௳க்குள் காரியதரிசிக்குக் கிடைக்கும்படி மணியார்டர் மூலம் (இன்ஷூர் மூலம் கூடாது) அனுப்பவேண்டும். புத்தகங்கள் ஷை அங்கத்தினர் கூறியுள்ள விலை யளவில் ஏலத்தில் எடுக்கப்பட்டால் அவை ரயில்வே மூலமாகவோ தபால் மூலமாகவோ அவ்வங்கத்தினர் முழுச்செலவில் அனுப்பிவைக்கப்படும். இவைகட்குரிய தபால் செலவு, தந்தி செலவு, பார்சல் செலவு, ரயில் செலவு முதலிய எல்லாச் செலவுகளையும் அவ்வங்கத்தினர் ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறு உபகாரம் புரிவதற்காக சமாஜத்துக்காவது, காரியதரிசிக்காவது எவ்வித கமிஷன் முதலிய கட்டணங்களும் செலுத்தவேண்டியதில்லை.

6. மேற்கண்டவைகளைத் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் சாதாரணமாக ஜங்கம சொத்து ஏலத்தைப் பற்றிய விதிகளும் நிபந்தனைகளும் இந்த ஏலத்திலும் அனுசரிக்கப்படும்.

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை, 10-7-1931.

இங்ஙனம்:
ம. பாலசுப்ரஹ்மண்யம், காரியதரிசி.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the aiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.